www.tamilarangam.net

அன்பளிப்பு 20P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 06.03.1992

**தமிழ்க் கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள். ஒரு வருடத்தில் 15 கிராமங்கள் மாற்றம்.**

மட்டக்களப்பு பொலநறுவை எல்லையில் உள்ள மூன்று தமிழ்க் கிராமங்கள் கடந்த மூன்று வாரங்களில் சிங்களக் குடியேற்றங்களாக மாற்றப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் இந்தப் பகுதியில் 15 தமிழ்க் கிராமங்கள் சிறி லங்கா இராணுவ உதவியுடன் சிங்களமயமாக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஆறு கிராமங்கள் பொலநறுவை மாவட்ட அரசாங்க அதிபர் பிரிவினுள் சேர்க்கப் பட்டுவிட்டன.

மேலும் பல கிராமங்களை பொலநறுவை நிர்வாகப் பகுதிக்குள் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டிற்கு வெளியே இராணுவத்திற்கு தொடர்ச்சியான தோல்விகள்

**■ யதார்த்த நிலை தரும் அச்சத்தால் குடாநாட்டிற்குள் நுழைய இலங்கை இராணுவம் மறுப்பு! ■**

குடாநாட்டுக்கு வெளியே வவுனியா - முல்லைத்தீவு- மட்டக்களப்பு உட்பட பல இடங்களில் இலங்கை இராணுவமானது தமிழீழ விடுதலைப்புலிகளிடம் தொடர்ச்சியான தோல்விகளைத் தழுவி வருகிறது. பல முனைகளினூடாக விமானங்கள் டாங்கிகள் சகிதம் தரை நகர்வு செய்ய முயன்றும் இயலாமல் பலத்த உயிர்ச் சேதங்களுக்கும் உள்ளாகி தவிக்கும் இலங்கை இராணுவத்திற்கு குடாநாட்டுக்குள் நுழைவது என்பது அவர்கள் எமலோகத்துள் நுழைவதற்கு ஒப்பான செயல் எனத் தெளிவாக தெரிந்து விட்டது. தர்மசங்கடமான நிலையில் செய்வதறியாது திகைத்து நிற்கும் இலங்கை இராணுவ அணிகளின், உள் உள்ள பிளவுகள் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியுள்ளன. குடாநாட்டு யுத்தம் ஆரம்பம் ஆனால் தாமே பலிக்கடாக்களாக வேண்டி வரும் என்ற அச்சம் ஒவ்வொரு இராணுவத்தினனையும் பிடித்தாட்டுகிறது. இதனால் இராணுவத் தீர்வு மூலம் தீர்வு காணலாம் என பகற்கனவு கண்ட இலங்கை அரசும் முன்னுக்குப் பின் முரணான செய்திகளை வெளியிடுகிறது. ' இப்போதைக்குக் குடாநாட்டின் மேல் தாக்குதல் இல்லை' என அறிவித்துள்ள அதே அரசின் இராணுவத் தலைமைப்பீடமானது ' 31 நாட்களுக்குள் விடுதலைப்புலிகளை ஒடுக்கியே தீருவோம்' என வீர வசனம் பேசுகின்றது. இதனால் இராணுவமும், அரசும் முரண்படுகின்றன என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இலங்கை இராணுவத்தையோ, அரசையோ சற்றும் பொருட்படுத்தாத தமிழீழ மக்கள், தமது மண் மீட்பு யுத்தத்தின் வெற்றி அண்மித்துள்ளமையை இனங்கண்ட நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கைகோர்த்து அவ் எதிர்ப்பையும் எத்தகைய இராணுவ தாக்குதலையும் சமாளிக்கத் தேவையான சகல ஆயத்தங்களையும் செய்து வருகின்றனர்.



# தமிழீழத்தை ஆக்கிரமிக்க இந்தியாவின் 3 அம்சத் திட்டம்

இந்திய அரசு இலங்கை அரசுடன் இணைந்து தமிழீழத்தின் மேல் கூட்டு ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கான மூன்று அம்சத் திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்தி வருவதாக புதுடில்லி வட்டாரங்களிலிருந்து கிடைத்த நம்பகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

- தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மாற்றுத்தலைமை ஒன்றை உருவாக்குதல்.
- தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட முக்கிய தலைவர்கள் மேல் அபாண்டமான குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி ' கைது செய்ய முயற்சித்தல்' என்ற போர்வையில் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தல்
- தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்கள் இருக்கும் இடங்களென கருதப்படும் பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தை முதலில் இறக்கி பின்னர் அவர்களுக்கு உதவவென விசேட இந்தியப் படைகளை அனுப்புதல். இதற்கென இந்து சமுத்திரக் கடலில் இலங்கைக்கு அண்மையாக இரண்டு கப்பல்களில் இந்திய ஜவான்களை வைத்திருத்தல்.

என்கின்ற மேற்கூறப்பட்ட மூன்று அம்சத் திட்டமொன்றை இந்திய அரசு இரகசியமாகத் தீர்மானித்துள்ளது. இதன் அடிப்படையில் காரியங்கள் நடைபெறவும் தொடங்கியுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மாற்றுத் தலைமைத்துவம் ஒன்றை உருவாக்கும் முயற்சியின் முன்னணியிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் டில்லியில் பேச்சுக்களை நடத்திய இந்திய அரசு அவர்களைப் புதுப்பிப்பதற்காக சுமார் ஒரு கோடி இலங்கை ரூபாய்களை அவர்களுக்கு வழங்கியுள்ளது. இதன்மூலம் தமிழீழ மக்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒரே தலைமையின் கீழ் முன்னெடுத்துச் செல்வதை தடுத்து பல போலித் தலைவர்களை உருவாக்கி குழப்பமான சூழ்நிலையை தோற்றுவிக்க இந்தியா ராஜதந்திர ரீதியில் திட்டமிடுகிறது

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க தலைவர்கள் மேல்அபாண்டமான குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி அவர்களை சர்வதேச சமூகத்தின் முன் குற்றவாளிகளாக இனம்காட்ட முயலும் இந்திய அரசு இதையே சாட்டாகக் கூறிதமிழீழப் பிரச்சினையில் தலையிட ஆயத்தமாகி உள்ளது. இதனை ' ஆக்கிரமிப்பு' என உலகம் சொல்லாதவாறு 'கைது செய்யும் முயற்சி' என்ற நியாயப் படுத்தலைக் கையாளலாம் என இந்திய அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளதாகத் தெரிய வருகிறது. இம் முயற்சியினூடாக உலகெங்கும் அகதிகளாகப் பரந்து வாழும் தமிழீழத் தமிழர்களையும் இலங்கைக்குத் திருப்பியனுப்ப வழிகாட்டுவதும் மற்றொரு நோக்கு எனக் கருதப்படுகிறது. இவ்வாறு ஐரோப்பா, கனடா, அவுஸ்ரேலியாவில் வாழும் தமிழ் அகதிகளை திருப்பியனுப்பச் செய்வதால் சர்வதேச ரீதியில் இவர்களால் மேற்கொள்ளப்படும் தமிழீழ விடுதலைப் போராட்ட முன்னெடுப்புப் பிரச்சாரங்கள், நிதியீட்டங்கள் போன்றவற்றைச் சிதைத்து தமிழீழ விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தலாம் எனவும் எல்லாவற்றிற்கும் மேலாக ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுஸ்ரேலியா போன்றவை தமது நாடுகளில் அகதிகள் சுமையாக இருப்பதாலேயே இலங்கையில் அமைதிக்கு முயற்சிக்கின்றன எனக் கருதும் இந்தியா, இம் முயற்சிகளால் சர்வதேச நாடுகளின் அமைதிக்கான முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி இப் பிரச்சனையைத் தனது கைக்குள் கொண்டு வரலாம் எனவும் திட்டமிட்டுள்ளது.

இறுதியாக தலைவர் பிரபாகரனையும், பொட்டம்மானையும் பிடிப்பதற்கான முயற்சி என்ற பெயரில் இந்தியப் படையின் இரண்டு கப்பல்களை இந்து மகாசமுத்திரத்தில் நிலைகொள்ள வைத்துள்ள இந்தியா, இலங்கை அரசின் மூலம் இலங்கை இராணுவத்தை தமிழீழ ஆக்கிரமிப் போரை துரிதப்படுத்தச் செய்து இலங்கை இராணுவத்துடன், இணைந்து உதவுதல் என்ற போர்வையில், இந்தியாவின் விசேட படை அணிகளை தமிழீழத்துள் புக வைத்து தமிழீழ ஆக்கிரமிப்பை வெற்றிகரமாக நடத்த திட்டமிட்டுள்ளது. இதற்காக தமிழ் தெரிந்த இரு படையணிகள் இந்து சமுத்திரக் கடல் பிராந்தியத்துள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனத்தெரியவருகிறது.

## அமெரிக்காவுக்காக 'பிரித்'

அமெரிக்காவின் நலனுக்காக பிக்குமார் ஒரு வருடப்பிரார்த்தனை.

இலங்கைக்குப் பொருளாதார உதவிகளையும், வர்த்தக வாய்ப்புக்களையும் வழங்கிவரும் அமெரிக்க நாட்டை ஆசீர்வதிக்கும் நோக்கில், பௌத்த குருமார்கள், ஓராண்டு காலம் நடத்தப்படும் பிரார்த்தனை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

# ஒவ்வொரு வீட்டிலும் ஒரு புலியாவது உண்டு

யாழ். அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு புலியாவது உண்டு. இந்நிலையில் இராணுவ முற்றுகைகளால் சாதாரண தமிழர்களே பாதிப்படைகிறார்கள்- பாதிப்படைவார்கள். எனவே அரசியல் ஒன்றுதான் அமைதிக்கு வழிவகுக்கும் ஆகவே இராணுவ முற்றுகையையும், தாக்குதல்களையும் உடன் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு.கே.மாணிக்கவாசகர், இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவையும், பிரதமர் டி.பி.விஜயதுங்காவையும் சந்தித்ததன் பின்பு "சண்டே டைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

" நான் ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் யாழ்ப்பாண மக்கள் அமைதியையே விரும்புகிறார்கள் எனக் கூறினேன். அவர்கள் பொறுமையுடன் எல்லாவற்றையும் கேட்டனர். ஆனால் இது சம்பந்தமாக எந்த திடமான " முடிவுகளையும் கூறவில்லை" சில முக்கிய மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பிரசவத்திற்கான ஊசி மருந்துகள் இல்லை. மலேரியா வயிற்றோட்டம், போன்ற தொற்றுநோய்கள் பரவிக் கொண்டிருக்கின்றன. அடிப்படை உணவுப் பொருட்கள் கிடைக்காத நிலை காணப்படுகிறது. பல வருடங்களாக யாழ்ப்பாணம் முழுவதும் மின்சாரமின்றி இருளில் உள்ளது.

நான் ஜனாதிபதியிடம் பூநகரியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 68 வாகனங்களை உடன் விடுவிக்கும்படியும், பிடித்து வைக்கப்பட்டுள்ள 20 மீனவர்களை விடுதலை செய்யும் படியும் கேட்டுள்ளேன் என்றார்.

அவரிடம் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்க ஊழியர்களை பயமுறுத்துகிறார்களா? எனக் கேட்டதற்கு " தமிழீழ விடுதலைப் புலிகள் எமது கஸ்டங்களையும், பிரச்சனைகளையும் உணர்ந்துள்ளனர். இந்நிலையில் அரசாங்கம் உண்மை நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும். விடுதலைப் புலிப் போராளிகள் என்னை நிர்வாக விவகாரங்கள் தொடர்பாகப் பல முறை சந்தித்துள்ளனர். நான்

தொடர்ச்சி 2ம் பக்கம்........

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழீழ விடுதலைப் போராட்டம் வெளிப்படுத்தும் உண்மைகள்

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமானது மறைக்கப்பட்ட மறுக்கப்பட்ட பல உண்மைகளை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையில் தமிழரும், சிங்களவரும் இரு தேசிய இனங்கள் எனவே இலங்கையில் காணப்படும் தமிழர் மேலான சிங்கள பேரினவாதத்தின் ஒடுக்குமுறையானது சிறுபான்மை - பெரும்பான்மை இனப்பிரச்சனையல்ல எனவே இதனை உள்நாட்டுப் பிரச்சனையாக உலகு ஒருநாளும் கருதக்கூடாது.

" தமிழர் பிரச்சனை" உள்நாட்டுப் பிரச்சனையல்ல என்று சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்கு " தேசிய இனம்" " தனிநாடு என்பவற்றுக்கான சர்வதேச அளவு கோல்களின் அடிப்படையிலேயே தமிழர் பிரச்சனையை பார்க்க வேண்டியுள்ளது.
தமிழீழத்தவர் (இலங்கைத் தமிழர்) ஒரு தேசிய இனம். தேசிய இனத்திற்கான சகல நிபந்தனைகளையும் தமிழீழத்தவர் பூர்த்தி செய்கின்றனர். எனவே தமிழீழம் ஒருநாடு.

போர்த்துக்கேயர்- ஒல்லாந்தர்-பிரிட்டிசார் என அந்நியர்கள், தமிழீழத்தின் இறைமையை ஆக்கிரமித்து ஆண்டனர். இறுதியாக பிரிட்டிசரால் தமிழீழமானது நிர்வாக வசதிக்காக சிங்கள நாட்டுடன் இணைக்கப்பட்டு இலங்கை (Ceylon) என்ற பெயரின் கீழ் ஒற்றையாட்சி முறையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

பிரிட்டிசாரின் தவறுகளால் தமிழீழத் தவரின் பிரதிநிதித்துவ விகிதாசாரங்கள் குறைக்கப்பட்டு சிறுபான்மையினத்தவர் என்ற மகுடம் சூட்டப்பட்டனர். இறுதியில் 1948ல் பிரிட்டிசார் இலங்கைக்கு சுதந்திரம் அளிக்கையில் சோல்பரி அரசியல் அமைப்பின்மூலம் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பு பெரும்பான்மையினரான சிங்களவரிடம் சென்றடைந்தது. ஆயினும் சோல்பரி அரசியல் அமைப்பின் 29 வது பிரிவின் படி சிறுபான்மை இனத்தவர்களுக்கெதிரான சட்டங்கள் எவற்றையாவது இலங்கைப் பாராளுமன்றம் இயற்றினால் பிரிட்டிசார் தலையிடலாம் என்ற அரசியல் அமைப்பு காப்பு ஒன்றை பிரிட்டிஸ் அரசு வழங்கியது. இந்த உறுதி மொழியினால் இலங்கையின் இறைமையின் மேலாதிக்க நிலை பிரிட்டனிடமே தொடர்ந்து இருந்து வந்தது என டாக்டர். என்.எம்.பெரேரா போன்ற சிங்கள அரசியலமைப்பு விற்பன்னர்களே ஏற்றுக்கொண்டனர். பிரிட்டிசாரிடம் தான் இலங்கையின் இறைமையின் மேலாதிக்கம் இருந்தது என்பதை தனிச் சிங்கள சட்ட அமுலாக்கலுக்கு எதிரான கோடீஸ்வரன் வழக்கில் பிரித்தானியாவின் பிரிவி கவுன்சில் இலங்கைப் பாராளுமன்றத்துக்கு மேலால் இட்ட உத்தரவு தெளிவாக தெளிவாக்கியது.

இதனாலேயே 1972 ல் சிங்களவர்கள் இலங்கையை குடியரசாக மாற்றி பிரிட்டனின் மேலாதிக்க நிலையை துண்டிக்க முனைந்தனர். வழமையான பாராளுமன்றத்துக்கு வெளியே நவரங்கலாவில் கூடிய சிங்களப் பேரினவாதிகளின் அரசியலமைப்பு சபையையோ அல்லது அவர்களால் இயற்றப்பட்ட அரசியமைப்பையோ தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே 1972ல் தமிழர்கள் அரசற்ற நாட்டினத்தவர் ஆயினர்.

இந்நிலையில் அரசற்ற நாட்டினத்தவர்களாக்கப்பட்ட தமிழர்கள் தமது பாரம்பரிய தாயகமான தமிழீழத்தையும், தமது உயிரையும், உடமையையும்,வாழ்வையும் சிங்களப் பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிப்பதற்காக " மண்மீட்பு போரை" தொடங்கினர். எனவே தான் தமிழீழ விடுதலைப்புலிகளால் தொடங்கப்பட்ட இம் மண் மீட்பு போரானது சட்ட பூர்வமான தேசிய விடுதலைப் போராட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்த்தை ஒடுக்க முனைந்த சிங்கள அரசு 1978 முதல் இன அழிப்பு யுத்தத்தை தமிழீழப் பிரதேசத்தில் நடாத்தி வருகின்றனர். இவ் யுத்தத்தால் உலகின் மூத்த இனங்களுள் ஒன்றான தமிழினம் அழிக்கப்படுகிறது . உயிர்க்கொலைகள், கொள்ளைகள், சூறையாடல்கள், கற்பழிப்புகள், சொத்தழிப்புக்கள் என எண்ணிக்கையிட முடியாத அளவு மனித வதைகளைத் தமிழீழ மக்கள் மேல் நடாத்தும் சிங்கள பேரினவாத இராணுவமும் அரசும் , பொருளாதாரத்தடை என்ற பெயரில், பட்டினி நிலைமையையும், மருந்து, மருத்துவம், மின்சாரம் போன்ற அடிப்படை மனித தேவைகளை தடைசெய்யும் கொடுமைகளையும், கூடச் செய்கின்றன.
இந்நிலையில் தமிழீழத்தவர் பிரச்சினையானது இலங்கையின் உள்நாட்டு பிரச்சினை என யாராவது கருதினால் அவர்களது அரசியல் சூன்ய நிலையை தான் அது வெளிப்படுத்தும் எனவே சர்வதேச சமூகமானது தமிழீழத்தவர் பிரச்சனையை சர்வதேசப் பிரச்சனையாக ஏற்றேயாக வேண்டிய கடப்பாட்டில் உள்ளனர்.

இத் தேசிய விடுதலைப் போராட்டத்தில்தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழ் மக்களின் இறைமை அவர்களிடமே மீண்டுள்ளது. தமிழீழ மக்கள் இறைமையை பூரணத்துவத்துடன் வெளிப்படுத்திப் பேணக்கூடிய ஒரு அரசியல் தீர்வே தமிழீழ மண்ணுக்கு மீட்பையும், இலங்கைக்கு அமைதியையும் ஏற்படுத்தும்.
இவ் அரசியல் யதார்த்தத்தை உணர இலங்கை அரசு மறுத்தால் தமிழ் மக்களின் மனவுறுதியும், தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்ட வலிமையும் காலத்தால் தமிழீழத்தை உருவாக்கியே தீரும்.

### ஒவ்வொரு வீட்டிலும்...

அவர்களால் பயமுறுத்தப்படவில்லை" என்றார்.

" தமிழீழ விடுதலைப்புலிகள் வரிகள் அறவிடுகின்றார்களா"; என்ற கேள்விக்கு நான் பதில் கூற முடியாது உள்ளேன். ஆனால் விடுதலைப்புலிகள் ஈழம் வங்கி ஒன்றை தொடங்கி விட்டார்கள். தமிழீழத்திற்கான காசையும் வெளியிட்டுள்ளார்கள் என்பதை வன்மையாக மறுக்கிறேன். " எனக் கூறிய அரசாங்க அதிபர்" யாழ்ப்பாண நிலை தாங்கமுடியாத அவல நிலையாக உள்ளது. ஆயிரக்கணக்கில் வேலையில்லாமல் உள்ளனர். அதேவேளை வாழ்க்கைச் செலவு உயர்ந்து கொண்டே செல்கிறது. கைத்தொழில் முயற்சிகள் தடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## முல்லைத்தீவு அதிரடியில் 7 காவலரண்கள் தகர்ப்பு!

முல்லைத்தீவில் 25 படையினர் பலி !
7 காவலரண்கள் தகர்க்கப்பட்டன !!
அதிகாலை நடந்த அதிரடி.

முல்லைத்தீவு இராணுவ முகாமின் கடற் கரையோரப் பக்கமாக அமைந்திருந்த ஏழு காவலரண்கள் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் தகர்க்கப்பட்டன. இத்தாக்குதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட இருபத்தைந்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்; மேலும் பலர் காயமுற்றனர்; ஐம்பது கலிபர் துப்பாக்கி ஒன்று உட்பட இருபது நவீன ஆயுதங்களையும் பல இராணுவத் தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

சுமார் 15 நிமிட நேரம் இடம்பெற்ற இத்தாக்குதலின் போது, காவலரண் பகுதி இராணுவத்தினருக்கு உதவுவதற்காக வந்த இராணுவ அணியும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி, பின்வாங்கிச் சென்றது என்று தெரிவிக்கப் பட்டது.
தாக்குதலில் உயிரிழந்த படையினரைத் தவிர மேலும் பலர் மிதிவெடிகளில் சிக்கி படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.
தாக்குதல் நடந்த சமயம் படையினருக்கு உதவியாக முல்லைத்தீவு பிரதான இராணுவ முகாம் பகுதியில் இருந்தும் மணலாறில் இருந்தும் கடும் செல் தாக்குதல்களும் மேற் கொள்ளப்பட்டன.
இத் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டது.
இந்தத் தாக்குதலின்போது முகாமுக்கு வெளியே தான் அமைத்திருந்த பாதுகாப்பு எல்லைப் பகுதியையும், ஆறு காவலரண்களையும் இழந்து இராணுவம் முகாமுக்குள் முடங்கிக் கொண்டது. என்றும் - இந்த ஆண்டில் விடுதலைப் புலிகள் இராணுவத்துடன் நேருக்கு நேர் நடத்திய முதல் தாக்குதல் இதுவென்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## வவுனியாவில் தரை நகர்வு தடுக்கப்பட்டது

- வவுனியாவிலிருந்து மன்னார் பக்கமாக , சிறிலங்காப் படை நகர எடுத்த முயற்சி விடுதலைப் புலிகளின் கடுமையான தாக்குதலினால் முறியடிக்கப் பட்டுள்ளது. விமானப் படையின் உதவியுடன், டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் மேற்கொள்ளப்பட்ட இத் தரை நகர்வு பாரிய இழப்புக்களுக்குப் பின் கைவிடப்பட்டது. இவ் இராணுவ நடவடிக்கைக்கு 3,000 துருப்பினர் பயன்படுத்தப்பட்டனர். அதேவேளை சிறி லங்கா இராணுவத்தினரால் அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட நவீன யுத்த தளபாடங்கள் இந் நகர்வின் போது பாவிக்கப் பட்டன என்பதும் குறிப்பிடக் கூடிய விடயமாகும்.

வவுனியாவில் இருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினரின் கவச வாகனம் ஒன்று விடுதலைப்புலிகளால் சிதறடிக்கப்பட்டுள்ளது. அதில் சென்ற படையினர் அனைவரும் கொல்லப்பட்டுள்ளனர். அதேவேளை விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேருக்கு நேரான கடும் மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும் பலர் அவயவங்களை இழந்துமுள்ளனர். கடந்த திங்கள், செவ்வாய் தினங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட பாரிய இழப்புக்களை அடுத்து, பின் வாங்கிக் கொண்ட படையினர் நேற்று நள்ளிரவு திடீரென ஊரடங்கு உத்தரவை அறிவித்து விட்டு தரை நகர்வை மேற்கொண்டனர். வன்னிவிக்ரம - 3 என்ற குறியீட்டுப் பெயருடன் ஆரம்பிக்கப் பட்ட இந்நடவடிக்கையின் நோக்கம் விடுதலைப் புலிகளை அடியோடு ஒழிப்பதே என இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சண்டை நடைபெறும் பகுதி புகை மண்டலமாகக் காட்சி தருவதாவும், துப்பாக்கிச் சத்தமும், குண்டுச்சத்தமும் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

- வவுனியா மன்னார் வீதியில் கடும் மோதல் இடம் பெற்று வருகின்றது . விமானங்கள், உலங்கு வானூர்திகள் கண்மூடித் தனமான தாக்குதல் மேற்கொண்டு இராணுவத்தினரின் தரை நகர்வுக்கு உதவியளித்த போதிலும், விடுதலைப் புலிகள் அதன் மத்தியில் நின்று உக்கிரமாகப் போராடி வருகின்றனர். இதனால் பல இராணுவத்தினர் இறந்தும் ஏராளமான இராணுவத்தினர் காயமடைந்துமுள்ளனர். படையினரின் கவச வாகனங்கள் பல சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் படையினர் உழவு இயந்திரத்தைப்பாவித்து வருவதாக அறியப்படுகிறது.
- கிழக்கில் விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் ஒன்றின் போது 20 க்கும் மேற்பட்ட படையினர் இறந்துள்ளனர்.
- யாழ். குடா நாட்டின் மீது கடந்த சில தினங்களாக விமானப் படை விமானங்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. குடா நட்டு மக்களை வெளியேறுமாறு துண்டுப் பிரசுரங்களும் வீசப்பட்டு வருகின்றன.
- யாழ். கரையோரப்பகுதிகள் மீது, எறிகணைத் தாக்குதலும், பீரங்கித் தாக்குதல்களும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது.

### குவார்க்கர்ஸ் குழு புலிகள் சந்திப்பு

யாழ்ப்பாணம் வந்திருக்கும் 'குவார்க்கஸ்' சமாதானக் குழுவின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தினர்.
விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னனித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தையா) அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை இக் குழுவினர் சந்தித்துப் பேசினர்.
புலிகளுடன் பேச்சு நடத்திய குழுவில் ஜெனிவாவைச் சேர்ந்த ஜோல் மக்கிலண்ட் அமெரிக்காவில் வதியும் இந்தியரான இராமமூர்த்தி ஆகியோர் இடம் பெற்றனர்.
பேச்சுக்கள் பற்றிய விபரம் எதுவும் வெளியிடப் படவில்லை.

## திருமலையில் வங்கிகள் மூடப்பட்டன

பாதுகாப்புக் காரணங்களுக்காக திருகோணமலையில் உள்ள வங்கிக் கிளைகள் அனைத்து மூடப்பட்டிருக்க வேண்டும் என்று அந்த மாவட்டத்தின் இணைப்பதிகாரி பிரிகேடியர் சிறி பீரிஸ் கேட்டுள்ளார்.
பாதுகாப்பு நிலைமை சீர்திருந்தும் வரை கிராமப் புறங்களில் உள்ள மக்களின் நன்மைக்காக நடமாடும் வங்கிச் சேவையை ஒழுங்கு செய்யலாம் என்று அவர் கூறியுள்ளார். திருமலை மாவட்ட உள்ளூர் திணைக்களங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் பிரிகேடியர் சிறி பீரிஸ் இத்த கவலைத் தெரிவித்தார்.

**பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.**

- திருகோணமலை மொறவேவ, குச்சவெளி ஆகிய பகுதிகளில் அரசு ஊரடங்கு உத்தரவை அறிவித்துள்ளது. இப் பகுதிகளிலும் இராணுவம் பெரும் நடவடிக்கையொன்றை ஆரம்பிக்கலாம் என்று மக்கள் அஞ்சுகின்றனர்.
- திருமலை சம்பூரில் இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தினால் இராசலிங்கம்.ரவிநேசன், கனகர். சிவமோகன், செல்லையா. யோகேஸ்வரன் ஆகிய மூன்று தமிழ்ப் பொது மக்கள் கொல்லப் பட்டுள்ளனர்.

**மக்களின் சுதந்திரமும் இறைமையும் பேச்சுவார்த்தைக்கான விடையங்களில்லை ஆயுதங்களால் பாதுகாக்கப்பட வேண்டியவை**

● சாண்டினோ

### 10 க்கும் அதிக படையினர கரடியனாறில் உயிரிழப்பு!

மட்டக்களப்பில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் மீது புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது ஓர் அதிகாரி உட்பட பத்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இரணைக்குளம் என்ற இடத்தில் இருந்து கரடியனாறு பகுதியை நோக்கி ரோந்து சென்ற இருநூறுக்கும் மேற்பட்ட படையினர் மீதே மயிலவெட்டுவான் என்னும் இடத்தில் வைத்து இத் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.
காலை முதல் பிற்பகல் 2 மணி வரை தொடர்ந்து இரு பகுதியினருக்கும் இடையே கடும் மோதல் இடம் பெற்றதாகவும், அதிரடிப் படையினருக்கு உதவியாக இரு பொம்பர்களும் இரண்டு கெலிகளும் கடும் குண்டுவீச்சுத் தாக்குதல் நடாத்தின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறிலங்கா அரசால் யுத்தத்தை தொடர்ந்து நடாத்த முடியுமா?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென தற்போது இரு பிரதான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அதன் மூலம் ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.
2. இப்போது அரசியல் தீர்வு பற்றி [illegible]வனம் செலுத்தக் கூடாது

[illegible]னப்பிரச்சினைத் தீர்வு குறித்து அமைச்சர் தொண்டமான் முன்வைத்த யோசனைக்குத் தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.
அதனைக் கண்டித்து கலாநிதி ஜெயதேவ உயன்கொட' லங்கா தீப' பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தொகுப்பு இதுவாகும்.

யுத்தத்தில் வெற்றி காணும்வரை சென்று புலிகளை அழித்துவிட்டு அதன்பின் அரசியல் தீர்வு பற்றிக் [illegible]வனிக்கலாம்.

இவை தொடர்பாக தற்போது தொண்டமான், பௌத்த பிக்குகள், பௌத்த மத பிரமுகர்கள், [illegible]ல்வியாளர்கள் ஆகியோர் யோ[illegible]னைகளை முன்வைத்துள்ளனர்.

இவை தவிர அரசு தீர்க்கமான [illegible]லையில் இந்த பிரச்சினை பற்றி [illegible]துவும் முன்வைக்கவில்லை. மங்[illegible] முனசிங்க தலைமையிலான [illegible]ாளுமன்றத் தெரிவுக்குழு எல்லாரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றை முன்வைக்கட்டும் என அரசு கூறிவிட்டு வாளாவிருக்கிறது.

இடை இடையே ஜனாதிபதி பிரேமதாசா விடும் அறிக்கை மூலம் அவர் அரசியல் தீர்வை விரும்புவது தெரிகிறது. எனினும் அவர் ஓர் இலக்கை வைத்து இவ்வாறு தெரிவிப்பதில் ஓட்டிக்கொண்டு நிற்கிறார்.

தொண்டமான் யோசனை பற்றி பயப்பிராந்தி ஏற்படுத்துபவர்களின் வாதங்களை சற்று ஆராய்வோம்.

அவர்களின் பிரதானவாதம் என்னவெனில், புலிகள் பலம் இழந்து போயிருக்கும் இத்தருணத்தில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது அவர்கள் மீண்டும் பலமடைய உதவும் என்பதாகும். அப்படிச் செய்தால் புலிகளைவெல்லக்கூடிய சந்தர்ப்பம் தவறிப்போகும் என அவர்கள் கூறினர். புலிகள் பலம் குறைந்துள்ளதாலேயே தொண்டமான் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்ற முடிவுக்கும் அவர்கள் வந்துள்ளனர்.

### அரசு யாரைப் பின் தொடரும்.

அரசு தொண்டமானைப் பின் தொடரப் போகிறதா?
அல்லது பிக்குகளினதும், பௌத்த பிரமுகர்களினதும் யோசனைகளைப் பின் தொடரப் போகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை பற்றி இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

### சிங்கள இனவாதம் தலைதூக்குகிறது.

அரசுக்குள்ளேயே இப்பிரச்சினை தொடர்பாக கருத்து வேறுபாடுகள் இருக்கக் கூடும். ஆனால் எதிர்காலத்தில் அரசு முகம் கொடுக்க வேண்டிய பாரிய பிரச்சினைகள் பலவுண்டு. அடிப்படை சிங்கள இனவாதிகளின் கை ஓங்காமலும், யுத்தத்தை தவிர்த்து அரசியல் தீர்வு காண்பதற்கும், அரசுக்கு உள்ள இடர், தீர்வு காண்பதை கட்டுப்படுத்தி விட இடமுண்டு. 1987 யூலை மாதத்தின் பின், தற்போது அடிப்படைச் சிங்கள இனவாதம் சிங்கள சமூகத்தில் தலைதூக்குவது தெரிகிறது.

1987-1988 காலத்தை விட, இப்போது வேறுபட்ட நிலைமை என்னவெனில், ஜே.வி.பி.உம், தேசபிரேமியும் இல்லாதிருப்பதே. அடுத்தது, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்த இனவாதக் கோஸ்டிகளுடன் இன்னும் தொடர்பு வைத்துக் கொள்ளாதது. அநேகமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்த இனவாத அரசியலில் இருந்து தூர நிற்க இடம் உண்டு.

### யுத்தத்திற்கு உதவி கிடைப்பது சந்தேகம்.

இச்சமயத்தில் யுத்த வழியை தொடர்ந்து எடுத்துச் செல்ல அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் என்பவை இலங்கைக்கு உதவியளிக்கும் என்பது மிகவும் சந்தேகத்துக்குரியது. வேறு எப்போதையும் விட இன்று இலங்கை மேற்குலக முதலாளித்துவ நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.

அதனால் இலங்கைக்கு உதவும் நாடுகள் அரசியல் தீர்வுக்கு வலியுறுத்தினால்,பிரேமதாசாவால் அதனைக் கவனிக்காது தள்ளிப்போட முடியாது.

ஒரு பக்கத்தில் அடிப்படை சிங்கள இனவாதிகள் யுத்தத்தைத் தொடருமாறு வலியுறுத்த, மறுபுறம் உதவியளிக்கும் நாடுகள் அரசியல் தீர்வுக்கு வலியுறுத்த, அரசின் நிலை இருதலைக்கொள்ளி எறும்பின் கதைபோலாகிவிடும். இது தவிர நீண்டகாலத்துக்கு யுத்தத்தை தொடர்ந்து செல்வதற்கு இலங்கையால் இயலுமா என்ற பிரச்சினை அதிதீர்க்கமான முடிவு காணப்பட வேண்டிய தொன்றாகும்.

யுத்தம் அவசியம் என்று கூறும் பயப்பிராந்தி காட்டும் சிங்கள பௌத்த பிரமுகர்கள் இது பற்றி சிறிதும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. உண்மையில் யுத்தத்தினால் வளர்ச்சிப் பணிகளுக்குரிய செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது. இலங்கையின் வருட வரவு செலவில் காற்பங்கு யுத்தத்திற்கு செலவழிக்கப்படுகிறது என்பதை இவர்கள் அலட்சியம் செய்வது தெரிகிறது.

### பழுவைச் சுமப்போரும், பாதிப்புறுவோரும்.

இதில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய பிரச்சினை என்னவென்றால் யுத்தத்தை நீடிப்பதால் ஏற்படும் மேலாதிக்க செலவின் பளுவாகும். யுத்தம் வேண்டுமெனச் சொல்லும் மகாநாயக்கத் தேரோக்கள், கொழும்பில் வாழும் தனவந்தர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், புதிய கதை சொல்பவர்கள் பளுவைச் சுமக்கவேண்டியிராது. சாதாரண மக்களே பளுவைச் சுமக்க வேண்டும்.

யுத்தத்தில் உயிரிழப்பவர்கள் கைகால் இழந்து ஊனம் அடைபவர்கள் ஏழைகளின் பிள்ளைகளே; யுத்தம் வேண்டுமென கூட்டங்களில் பேசிக்கொண்டும், பத்திரிகைகளில் கடிதம் எழுதிக்கொண்டுமிருக்கும் கல்விமான்களின் பிள்ளைகள் அல்லர்.

யுத்தத்தை தொடருமாறு உபதேசிப்பவர்கள் யுத்தத்தின் காரணமாக துக்ககரமான நிலையை எய்தியுள்ள தமிழ்மக்கள் பற்றியோ, வடக்கு, கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் பற்றியோ, முஸ்லீம்கள் பற்றியோ கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

கொழும்பில் இருந்து கொண்டு யுத்தம் பிரகடனம் செய்வது ஒன்று; யுத்தத்தினால் தற்போது ஏற்பட்டுள்ள நாசம் குறித்து இனவாதத்தைவிடுத்து, பௌத்த மக்கள் மனிதாபிமானத்தோடு பார்ப்பது வேறொன்று. அந்த மனிதாபிமானப் பார்வை தேவை.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கு இதைத்தவிர வேறு வழி இல்லை.

## புலிகளை முறியடிக்க திறமையற்ற இராணுவம்

அடுத்தடுத்து அங்கும் இங்கும் எங்குமாக விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதல் காரணமாக ஆயுதப் படையினரின் நிலை தளம்பியுள்ளது.
தாக்குதல் நடத்தப்பட்ட பகுதிகளில் ஆயுதப்படையினரின் பூரண ஆதிக்கம் இன்னும் வரவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. ஞாயிறு 'சண்டே ஐலண்ட்' இதழில் றோகான் குணசேகர எழுதிய 'வடக்கு-கிழக்கு நிலைவரம் ' பற்றிய கட்டுரையில் இவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது.
குறைந்தது பத்தாண்டுகளாக இடம் பெற்று வரும் கெரில்லாப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் கரந்தடித் தாக்குதல்களையும், கண்ணிவெடித் தாக்குதல்களையும் எதிர் கொண்டு முறியடிக்கும் திறமையற்ற நிலையில் தான் ஆயுதப் படையினர் உள்ளனர் என்பதையே, அடுத்தடுத்து கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை பிரதிபலிக்கின்றது.
பாதுகாப்புப் படைப் பிரிவுகள் , விடுதலைப் புலிகளின் கரந்தடித் தாக்குதலைத் தேடிச் செல்லக் கூடிய நிலை ஏற்பட்டுளளது. இது யுத்தம் நடத்தும் விதம் குறித்து 'அதிருப்தி உணர்வை' படையினர் மத்தியில் ஏற்படுத்தியிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.
- இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரே சமயத்தில் 10 பேர் இணைவு

குரு நகரில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பிரதிப் பொறுப்பாளர் கவிஞர் வாஞ்சிநாதனின் உரையைத் தொடர்ந்து அவர் முன்னிலையிலேயே பத்துப் பேர் தாம் ஆயுதம் ஏந்திப் போராட முன் வந்து தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர்.
இதைவிட மற்றும் சில இளைஞர்கள் தாமும் வரவிருப்பதாகக் கூறினர். அண்மைக்காலத்தில் அரசு போர் ஆயுத்தங்களைச் செய்து வருவதன் எதிரொலியாக இது அமைந்துள்ளது.

## யாழ் நகரில் தகவல் தொடர்பு சேவை

யாழ் நகரில் ஆஸ்பத்திரி வீதி புகையிரத நிலையச் சந்தியில் புதிய தனியார் தகவல் தொடர்பு நிறுவனம் ஒன்று தற்போது இயங்கி வருகின்றது. இந்த நிறுவனத்தின் மூலம் குடா நாட்டு மக்கள் கொழும்புக்கும், பிற நாடுகளுக்குமான அவசரச் செய்திப் பரிமாற்றத் தகவல்களை அறியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
யுத்தச் சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் இப் புதிய தனியார் நிறுவனத்தின் சேவை அவசியமான ஒரு பணியெனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

## அதிபரினால் அகதிகள் தங்கிய பாடசாலை மூடப்பட்டது

சுன்னாகத்தில் கல்லூரியொன்றில் தற்காலிகமாக இயங்கி வந்த இடம் பெயர்ந்த பாடசாலையை அக் கல்லூரி அதிபர் இயங்க விடாது தடுத்துள்ளதால் அது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்களத்துக்கு முறையிடப்பட்டுள்ளது.
சாதாரண பூங்கன்று ஒன்றை அகதிப் பிள்ளை ஒன்று பிடுங்கியதே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.
இது குறித்து உடனடியாக விசாரணை நடத்தக் கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## முல்லைத்தீவுக் கடலிலும் படையினர் அட்டகாசம்

முல்லைத்தீவுக் கடற்பரப்பிலும் சிறி லங்காப் படையினர் அட்டகாசம் புரிந்து வருகின்றனர்.
இரணைப்பாலையைச் சேர்ந்த யேசுராசா, சின்னராசா ஆகியோர் கடலில் வைத்துத் தாக்கப்பட்டனர் என்றும், அவர்களின் படகுகளில் இருந்த எரிபொருள் கடலுக்குள் வீசப்பட்டது என்றும், மற்றொரு படகில் சென்ற ஜீவராசா, றெஜினோல்ட் ஆகிய இருவரும் வள்ளத்தில் இருந்து கடலுக்குள் வீசப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறிலங்காவுக்கு உதவியில்லை பிரிட்டன் உறுதி

சிறி லங்காவுக்கு நிதி உதவியோ அல்லது ஆயுத உதவியோ வழங்குவதில்லை என்று பிரிட்டன் மீண்டும் கூறியுள்ளது.
உதவும் நாடுகள் சிறி லங்காவுக்குப் பொருளாதார உதவிகளை வழங்க முடிவு செய்துள்ளபோதிலும், பிரிட்டன் தனது முந்திய நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மலையகப் போர்முனையால் படையினருக்குக் 'களைப்பு'

ஊவாப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய இரண்டு தாக்குதல்களை அடுத்து மலையகத்தில் புதிய போர் முனை ஏற்பட்டுள்ளது. இந்தப் போர் முனையைச் சமாளிக்க ஆயுதப்படையினர் அழைக்கப்பட்டால், அது ஆயுதப் படையினருக்குப் பெரும் 'களைப்பை' (Strain) ஏற்படுத்தும் என்று இராணுவத்தின் சில வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.
"ஊவாப் பகுதியில் இப்போது பாதுகாப்பு நடவடிக்கை சில துணை இராணுவப் படைபிரிவுகளின் ஆதரவுடன் பொலிசாரினாலேயே மேற்கொள்ளப்படுகிறது.
இராணுவம் பெரிய அளவில் அங்கு ஈடுபடுத்தப்படவில்லை.
இராணுவத்தினரையும் இராணுவத் தளங்களுடன் பெரும் எண்ணிக்கையில் மலை நாட்டில் பயன்படுத்துவது பெரும் செலவை ஏற்படுத்தும்.
மலைப்பிரதேசத்தில் இராணுவத்தினர் பணிபுரிய அழைக்கப்பட்டால் அவர்களுக்குப் புதிய கஸ்டங்களை ஏற்படுத்தும்".
இப்படி இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஊவாவில் சீருடையினர் கொள்ளை

ஊவாப் பகுதித் தோட்டங்களில் சீருடை அணிந்தவர்கள் பொது மக்களைப் பயமுறுத்தி கொள்ளையிலீடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
பதுளை ஸ்பிறிங்வெளி 6 வது டிவிசனில் அண்மையில் நுழைந்த சீருடையினர் 25 பவுண் நிறையுடைய தங்க நகைகளை கொள்ளையடித்துள்ளதுடன் பணத்தையும் திருடிச் சென்றனர்.
சீருடை அணிந்தவர்களின் இத்தகைய நடவடிக்கையினால் இங்குள்ள மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

## தமிழகத்தவர் சிறி லங்கா கடற்படையினரால் கொலை - இந்தியா மௌனம்

கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் மீது சிறி லங்கா கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.
சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த இந்த மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது ரோந்து வந்த சிறி லங்கா கடற்படையினர் அவர்களை நோக்கிச் சுட்டனர் என்று தகவல்கள் தெரிவித்தன.
புதுக் கோட்டை மாவட்டம், கோட்டைப் பட்டினம் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## திருமலையில் வீர மரணமுற்ற போராளிகளுக்கு நினைவாஞ்சலி

திருகோணமலை யமாலியா கடற் பிரதேசத்தில் ஏற்பட்ட கடற் கொந்தளிப்பில் சிக்குண்டு வீர மரணமடைந்த 21 வீர வேங்கைகளின் இரண்டாவது ஆண்டு நினைவாஞ்சலிக் கூட்டம் நுணாவில் மேற்கு பொன்னம்மான் வீடமைப்புத்திட்டத்தில் நடை பெற்றது.
கூட்டத்தின் ஆரம்பத்தில் திருகோணமலை மாவட்ட அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. வீரமணி புலிக் கொடியை ஏற்றி வைத்தார். தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. கந்தண்ணா மங்கள தீபம் ஏற்றி வைத்தார்.
திருகோணமலை மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்

தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காணும் நோக்கில் தீர்வுத்திட்டங்கள் முன் வைக்கப்படும் போது அல்லது உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படும் போது சிங்கள பேரினவாதப் பூதம் தலை தூக்குவதும் அதன் கோரத் தாண்டவத்தால் அந்தச் சமரச முயற்சிகள் இடை நடுவே கைவிடப்படுவதும் இலங்கை அரசியல் வரலாற்றில் காலத்துக்குக் காலம் அரங்கேற்றப்படும் ஒரு தொடர் நாடகம் என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள். தொண்டமானின் சமீபத்திய சமாதான முயற்சியும் இந்தத் துன்பியல் நாடகத்தின் ஒரு சோகமான கட்டமாக முடிவு பெற்றிருக்கின்றது.

தொண்டமானின் சமரச முயற்சியும், அவர் முன் வைத்த தீர்வுத் திட்டமும், விடுதலைப் புலிகளுடனேயே நேரடியாகப் பேச வேண்டுமென அவர் கொண்டிருந்த நிலைப்பாடும், இதன் எதிர் விளைவாக தென்னிலங்கையில் எழுந்துள்ள பெரும் சர்ச்சையும், பேரினவாத எழுச்சியும் இன்று உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு விஸ்வரூபம் பெற்றிருக்கிறது. தமிழரின் இனப் பிரச்சினையோடும், விடுதலைப் புலிகளின் போராட்டத்தோடும் பின்னி நிற்கும் இந்த விவகாரத்தை எமது மக்கள் முழுமையாக அறிந்து கொள்வது அவசியம். அத்தோடு சிங்களப் பேரினவாதத்தின் தன்மையையும், அரசியல் தீர்விலுள்ள சிக்கல்களையும் இது தெளிவாகக் காட்டும். இந்த நோக்கத்துடனேயே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.



## அன்ரன் பாலசிங்கம்

தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல்ரீதியான தீர்வு வேண்டுமென்றால் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனேயே நேரடியாகப் பேச வேண்டுமென்ற நிலைப்பாட்டைத் திரு. தொண்டமான் நீண்ட காலமாகவே கொண்டிருந்தார். விடுதலைப் புலிகள் இயக்கம் தான் தமிழீழ மக்களின் உண்மையான போராட்ட சக்தி என்பதையும், புலிகளை இராணுவ ரீதியில் அடக்கிவிடவோ அழித்துவிடவோ முடியாது என்பதையும் அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். இது சம்பந்தமாக அவர் பகிரங்கமான அறிக்கைகளையும் வெளியிட்டு வந்தார். இந்தியாவின் இராணுவத் தலையீடும், தமிழரின் ஆதரவை இழந்த ஆயுதக் குழுக்களை அதிகாரத்தில் அமர்த்த இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளும், அதனால் ஏற்பட்ட தோல்விகளும், விடுதலைப் புலிகளின் இலட்சிய உறுதியும், போராட்டத்திறனும் திரு. தொண்டமானுக்குச் சில அரசியல் உண்மைகளை உணர்த்தியிருக்கலாம். இதனால் புலிகள் இயக்கத்தின் முக்கியத்துவத்தை அவர் சரியாக எடை போட்டிருந்தார். எனவே இந்தியாவினதும், பிரேமதாசா அரசினதும் அடிவருடிகளாகச் செயற்பட்டு வரும் ஏனைய தமிழ்க் குழுக்களை நிராகரித்துவிட்டு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு ஒரு சமரச முயற்சியை மேற்கொள்ள திரு தொண்டமான் விரும்பினார்.



திரு. தொண்டமான் எதற்காக இந்த சமரச முயற்சியை ஆரம்பித்தார் என்பது ஒரு பெரிய கேள்வி? இராணுவத் தீர்வில் நம்பிக்கைகொண்டு இலங்கைத் தீவைப் பெரும் அழிவுப்பாதையில் இட்டுச் செல்லும் பிரேமதாசா அரசுக்கு கை கொடுத்து உதவ விரும்பினாரா? அல்லது தமிழன் என்ற ரீதியில் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமெனத் துணிந்தாரா? அன்றி, அரசியல் வாழ்விலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு முன்னராக ஏதாவது அர்த்தமுள்ள உருப்படியான காரியத்தைச் சாதித்து விடலாம் என எண்ணினாரா? அல்லது மலையகத்து அரசியல் நிர்ப்பந்தங்கள் அவரைத் தூண்டி விட்டதா? ஏதோ ஒரு காரணத்தால் உந்தப் பட்டு திரு. தொண்டமான் இந்த அக்கினிப் பரீட்சையில் காலை வைத்தார்.

கடந்த யூலை மாத முற்பகுதியில் திரு.தொண்டமான் தனது பிரதிநிதி ஒருவரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார். விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடு என்ன? தமிழீழ தனியரசுக் கோரிக்கைக்கு மாற்றுத் திட்டம் ஒன்று முன் வைக்கப்பட்டால் புலிகள் அதனைப் பரிசீலனை செய்வார்களா? சமாதானப் பேச்சுக்களில் பங்கு பற்றுவார்களா? திரு. தொண்டமான் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தால் அவருக்கு பாதுகாப்பு அளிப்பார்களா? இப்படியான வினாக்களுக்கு விடை தேடி இந்தப் பிரதிநிதி யாழ்ப்பாணம் வந்து எம்மைச் சந்தித்தார். சமாதானப் பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு சம்பந்தமான விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை நாம் அவருக்குத் தெளிவாக விளக்கினோம். சமாதானக் கதவுகள் திறந்திருக்கின்றன. திரு. தொண்டமான் எப்பொழுதும் யாழ்ப்பாணம் வரலாம். புலிகளுடன் பேச்சுக்களை நடத்தலாம் என நாம் அவரிடம் கூறினோம்.

எமது நிலைப்பாடு திரு. தொண்டமானுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர் மாநாடு ஒன்றின்போதும் திரு. தொண்டமானை யாழ்ப்பாணம் வரவழைத்து ஒரு பகிரங்க அறிவிப்பையும் விடுத்தோம்.

### தொண்டமானின் முதற் கடிதம்.

27.8.1991 திகதியிடப்பட்ட தனது முதலாவது கடிதத்தை அமைச்சர் தொண்டமான் எமது இயக்கத் தலைவர் திரு பிரபாகரன் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். அதில் கூறப்பட்டிருப்பதாவது :

அன்புடையீர்,

நீண்டகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து தமிழ் மக்கள் எல்லோரும் விரும்பி நிற்கும் நல்லதோர் தீர்வினை உருவாக்குவதற்கு நான் பல காலமாக முயன்றுள்ளேன். இதன் பலாபலன் அனுகூலமாகக் கூடிய சாத்தியக் கூறுகள் இப்போது தென்படுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் சமாதான முயற்சியை மேலெடுத்துச் செல்வதற்கு உங்களது இயக்கம் எனக்கு விடுத்துள்ள பகிரங்க அழைப்பை ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையில் ஒரு நிரந்தரத் தீர்வைச் சிந்திக்கமுடியும். தமிழர்களின் அபிலாசைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய திட்டவட்டமான கருத்துக்களை நீங்கள் வரையறுத்திருப்பீர்கள். இது விடயமாக எனது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சில சிந்தனைகளை உருவாக்கியுள்ளது. அவற்றை நான் அனுப்பி வைக்கிறேன். உங்களின் கருத்துக்களையும் எனக்கு அனுப்பி வைத்தால் பேச்சு வார்த்தை ஆரம்பிக்க உதவியாக இருக்கும்.

நான் ஒரு தமிழன் என்ற முறையிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற ரீதியிலும் இந்த யோசனைகளை அனுப்பி வைக்கிறேன். இந்தக் கருத்துக்களும் சிந்தனைகளும் அரசாங்க சார்பற்றவையாக கருதப்பட வேண்டும். உங்களது பதிலும் ஆலோசனைகளும் கிடைத்ததும் அவசியமேற்படின் உங்களுடன் மீண்டும் தொடர்பு கொள்வேன்.

இங்ஙனம்
உங்கள் விசுவாசமுள்ள
சௌ. தொண்டமான்.

திரு தொண்டமான் அனுப்பி வைத்த யோசனைகள் ஒரு முழுமையான தீர்வுத்திட்ட வடிவமைப்பைக் கொண்டிருக்கவில்லை. நிலவுரிமை, பாதுகாப்பு, பொருளார திட்டமிடுதல், பொது சேவை போன்ற விடயங்களையும் வேறு சில துறைகள் சார்ந்த அதிகாரப் பரவலாக்கம் பற்றியுமே மிகச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருந்ததே தவிர வேறு விளக்கம் எதுவும் தரப்படவில்லை.

இந்த யோசனைகளில் 'மாகாண அரசு' என்ற சொற்பிரயோகம் கையாளப்பட்டிருந்ததே தவிர தமிழர் தாயகத்தின் பிரதேச அந்தஸ்து, சுயாட்சி உரிமை, ஆட்சி அதிகாரம் எதுவும் பற்றி தெளிவான விளக்கமோ வரையறைகளோ இருக்கவில்லை. ஒரு சில திருத்தங்கள் செய்யப்பட்ட பழைய மாகாணசபைத் திட்டத்தின் அடிப்படைகளைக் கொண்டது போல இந்த யோசனைகள் அமைந்திருந்தன. இது எமக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.



### கடிதங்கள் மூலம் பேச முடியாது.

திரு. தொண்டமானை நாம் யாழ்ப்பாணத்துக்கு வரவழைத்து அவருடன் நேரடியாக பல விடயங்கள் பற்றி பேசுவதற்கு தீர்மானித்திருந்தோம். எமது அழைப்பை ஏற்று இங்கு வருவதற்குப் பதிலாக கடிதமூலமாகக் கருத்துக்களைப் பரிமாறி,எழுத்துமூலமாக பேச்சு வார்த்தைகளை நடத்த அவர் முனைவதுபோல எமக்குத் தோன்றியது. அத்துடன் அவர் தமது யோசனைகள் அரசாங்க சார்பற்றது என வலியுறுத்திக் கூறியதும் எமக்கு உற்சாகத்தை அளிக்கவில்லை. எனவே திரு தொண்டமானுக்கு கீழ்க்கண்ட பதிலை அனுப்பிவைத்தோம்.

அன்புடையீர்,

எமது இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு நீங்கள் 27- 8-91 ல் அனுப்பி வைத்த கடிதத்தைப் பெற்றுக் கொண்டோம். கடிதம் கிடைக்கப் பெற்ற தகவலை சர்வ தேசச் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக உங்களுக்கு அறியத் தந்தோம். நீங்கள் இந்தியா சென்றிருந்ததால் உடன் பதில் எழுதுவது தாமதமாகியது.

தமிழீழ மக்களின் தேசியப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் நீங்கள் முன்வைத்த யோசனைகளை நாம் கருத்தில் எடுத்துக் கொண்டோம். அரசியல் தீர்வு குறித்து எமது இயக்கத்தின் கருத்துக்களையும் கேட்டிருந்தீர்கள்.

ஒரு உருப்படியான தீர்வுத் திட்டத்தை நோக்கிய கருத்துப் பரிமாற்றங்களும், விளக்கங்களும் கடிதமூலம் வைத்துக் கொள்வது நடைமுறைக்குச் சிரமமானது. அத்துடன், சமாதானப் பேச்சுக்களைத் தொடர இது உகந்த வழிமுறையும் அல்ல. நேரடியாகச் சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதே சிறந்த வழியாகும்.

ஆகவே, நாங்கள் ஏற்கனவே விடுத்த அழைப்பினை ஏற்று, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து எமது நிலைப்பாட்டை அறிந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம். இது சமாதான முயற்சியை மேலேடுத்துச் செல்வதற்கு வாய்ப்பானதாக அமையும் என நாம் கருதுகிறோம்.

இங்ஙனம்
உங்கள் உண்மையுள்ள
கோ. மகேந்திரராசா

தமிழீழத் தாயகத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் சிங்கள அரசு ஒரு முழுமையான யுத்தத்தை நடத்திக் கொண்டு பொருளாதாரத் தடைகளை விதித்து தமிழ் மக்களைப் பெரும் துன்பத்தில் தள்ளிவிட்டிருக்கும் ஒரு நெருக்கடியான நேரத்தில் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்றால் அதற்கான ஒரு சமரச, நல்லெண்ண சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் நலனில் அக்கறையும், அரசியல் தீர்வில் உண்மையான ஆர்வமும் இருந்தால் அரசாங்கம் முதற்படியாக ஒரு சமாதானச் சூழ்நிலையை உண்டு பண்ண உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு புறம் பெரியதொரு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்க மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது நடைமுறைச் சாத்தியமாகாது.

இதனை நாம் திரு. தொண்டமானின் பிரதிநிதியிடம், தெளிவாக விளக்கியிருந்தோம். அரசாங்கத்தின் இராணுவ பொருளாதார அழுத்தங்கள் மத்தியில் சுயாதீனமான சமரசப் பேச்சுக்கள் நடத்துவதிலுள்ள சிரமங்களைத் திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வரும் பொழுது எடுத்து விளக்கலாமென முடிவு செய்திருந்தோம். அத்துடன் திரு. தொண்டமான் யாழ்ப்பாணம் வந்து இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்து, எமது மக்களையும் நேரில் சந்தித்து பேச வேண்டும் என்பதிலும் நாம் அக்கறையாக இருந்தோம்.

தொடரும்-

## யாழ். ஆஸ்பத்திரியில் ஷெல்

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் மண்டை தீவிலிருந்து ஏவப்பட்ட செல் குண்டு விழுந்து வெடித்தது.

குண்டு வெடித்த சமயம் மண்டைதீவுப் பகுதியிலிருந்து படையினர் வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை - யாழ். கோட்டை மற்றும் நாவாந்துறைப் பகுதிகளிலும் செல்கள் விழுந்து வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் ஆஸ்பத்திரிப் பாதுகாப்பு வலயத்துக்குள் - அதுவும் ஆஸ்பத்திரிக்குள் செல் - விழுந்து வெடித்தது குறிப்பிடத்தக்கது.

பழைய வெளி நோயாளர் பகுதியில் - கர்ப்பிணி கிளினிக் பகுதியில் - வைத்திய சிகிச்சைக் கிளினிக், முறிவு, நெரிவுக்கிளினிக் ஆகியவற்றுக்கு அருகில் குண்டு வெடித்தது. இதனால் நோயாளர் அமரும் வாங்குகளும், கட்டடக் கூரையும் சிதறின. கிளினிக் நடைபெறும் வேளையில் இப் பகுதியில் நோயாளர்களும், ஆஸ்பத்திரி ஊழியர்களுமாக சராசரி 300 பேர் வரை காணப்படுவது வழக்கம்.

எனினும் குண்டு வெடித்த சமயம் - மாலையாதலால் - தெய்வாதீனமாக எவரும் அப் பகுதியில் இருக்கவில்லை. இதனால் பேரிழப்பு தவிர்க்கப்பட்டது.

## புத்தாண்டுக்கு முன்னர் புலிகளை முறியடிப்போம்

எதிர்வரும் ஏப்பிரல் புத்தாண்டுக்கு முன்னர் வடக்கு, கிழக்கில் உள்ள புலிகளை முறியடிப்போம் என்று பிரிகேடியர் வி. விமலரத்ன அனுராதபுரம் சரளியபுர இராணுவ முகாமில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சரளியபுர இராணுவ முகாம் கஜபாகு படையணியிலிருந்து பயிற்சி பெற்று வெளியேறிய 221 இராணுவத்தினரின் வெளியேற்று வைபவத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இது எங்கள் வாழ்வு

சிறுகதை

திசைமாறி வந்தகாகம் ஒன்று மட்டும் உயரத்தில் தயங்கித் தயங்கி பறந்து கொண்டிருந்தது. விடியலின் நேரம், சூரிய கதிர்கள் இன்னும் நிலத்தைத் தொட வில்லை.

எறிகணைகள் மட்டும் ஒவ்வொரு முறையும் வெவ்றே திசைகளில் இலக்குத் தேடிப் பறந்து கொண் டிருந்தன.

அமுதன் ஒரு அகன்ற பனையில் சாய்ந்தபடியே அரைத் தூக்கத் தில் இருந்தான். அந்தப் பனந் தோப்பில் பரவலாக அவன் தோழர்கள் கூட்டம் கூட்டமாக இருந்தார்கள். எறிகணைகளின் வீச்சு ஓயும் பொழுது இராணுவத் தினர் வருவார்கள் என்பது அவர் களுக்குத் தெரியும்.

'அமுதா என்ன சிந்தனையில் இருக்கிறாய்"? கேட்டுக் கொண்டே அருகில் வந்த மர்ந்த்ன் வில்வன்.

அமுதன் சாதுவாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பே அந்தக் கேள் விக்கு பதில் என்பது வில்வனுக் குத் தெரியும்.

அவர்கள் எழுந்து நடந்தனர். பனந்தோப்பின் விழிம்பில் பனக் குற்றிகளால் அமைக்கப்பட்ட காவலரண்கள் வரிசையாக இருந்தன. காவலரண் ஒன்றின் மேல் ஏறி கால்களை அகலப் போட்ட படியே அமர்ந்தான் அமுதன். அவர்களுக்கிடையில் இனம்புரியாத அமைதி குடிபுகுந் திருந்தது.

'உனக்குத் தெரியும் மூதூரைச் சேர்ந்த முன்னம் போடி வெட்டை என்பது என்ர கிரா. மம்....., இந்த மண்ணின்ர துயரம் என்ர வாழ்க்கையையும் நிறைய பாதிச்சது....இப்ப என்ர கிராமம் அழிஞ்சு போச்சுது, என்ர குடும் பமும் சிதைஞ்சு போச்சுது' சொல் லிக் கொண்டு வந்த அமுதன் அமைதியாகி விட்டான். முகத் தில் பல்வேறு உணர்ச்சிகள் பதிந்து போய்க் கிடந்தது.

'எனக்கும் என்ர தங்கச்சியோட, எங்கட ஊரில் வீட்டோடு வாழ வேணும் என்று ஆசைதான். ஆனால் அது நடக்க முடியாத நினைவு. இந்த நாடு எப்போது சுதந்திர மகிழ்ச்சியை சந்திக் குதோ அன்று தான் என் போகின்ற போராளிகளின் வாழ் விலும் வசந்தம் வீசலாம்" தன் மனவுணர்வுகளை வெளிப்படுத்தி விட்ட திருப்தியோடு அவன் கீழே பார்த்தான்.

'அது பிரச்சனை இல்லையடா, உன்ர தங்கச்சி என்ர தங்கச்சி தான். அவளுக்குமட்டுமல்ல, அவள் போன்ற ஒவ்வொரு குழந் தைக்கும் இந்த மண்ணில ஒரு வளமான எதிர்காலம் நிச்சயமா பிறக்கும் ' வில்வன் ஆறுதலுக்கு சொல்லி முடிந்தான்.

நினைவுகளை மாற்றிவிட வேண் டும் என்ற முடிவுடன் தோள் களை ஒரு குலுக்கு குலுக்கி விட்டு கைகளை வீசியபடியே திரும்பிப்பார்த்தான் அமுதன். பனந்தோப்புக்கு முன்பாக விரிந்த வெட்டை வெளியில் விடியலின் சூரியக் கதிர்கள் பட்டுத்தெறிக்கத் தொடங்கியது.

கண்ணுக்கு எட்டும் தூரத்தில் கிடந்த பற்றைக் காடுகள் இரு ளாகவும் - அமைதியாகவும் கிடந் தன.

'இன்று மாலைக்குள், இப்போது எழும் சூரியன் மறைவதற்குள், இந்த வெட்டை வெளியில்...எங்க

திருப்தியோடு அவன் கீழே பார்த் தான்.

'அது பிரச்சனை இல்லையடா, உன்ர தங்கச்சி என்ர தங்கச்சி தான். அவளுக்குமட்டுமல்ல, அவள் போன்ற ஒவ்வொரு குழந் தைக்கும் இந்த மண்ணில ஒரு வளமான எதிர்காலம் நிச்சயமா பிறக்கும் ' வில்வன் ஆறுதலுக்கு சொல்லி முடிந்தான்.

நினைவுகளை மாற்றிவிட வேண் டும் என்ற முடிவுடன் தோள் களை ஒரு குலுக்கு குலுக்கி விட்டு கைகளை வீசியபடியே திரும்பிப்பார்த்தான் அமுதன். பனந்தோப்புக்கு முன்பாக விரிந்த வெட்டை வெளியில் விடியலின் சூரியக் கதிர்கள் பட்டுத்தெறிக்கத் தொடங்கியது.

கண்ணுக்கு எட்டும் தூரத்தில் கிடந்த பற்றைக் காடுகள் இரு ளாகவும் - அமைதியாகவும் கிடந் தன.

'இன்று மாலைக்குள், இப்போது எழும் சூரியன் மறைவதற்குள், இந்த வெட்டை வெளியில்...எங்க ளில் எத்தனை தோழர்கள் விழப் போகின்றோம் ' இதயத்தில் வ லி த் த து

' எங்கட மண், வருபவன் ஆக்கிர மிப்பாளன் ' அவனுக்குள் ஓர் புத் துணர்வு. இடக்கையிலிருந்த அவனது துப்பாக்கி வலக்கைக்கு உறுதியாக மாறிக் கொண்டது.

' இந்த மண்ணின் மலர்ச்சிக்கு இழப்புகள் தேவையானதுதான்' அவனின் நினைவுகளை தொடர்ந்து பனந்தோப்பின் ஒரு முனையிலிருந்து இலகு இயந்தி ரத் துப்பாக்கி ஒன்று இயங்கத் தொடங்கியது.

* *

வைத்தியசாலைக் கட்டிலில் அமுதன் படுத்திருந்தான். காயம் சற்றுப் பலமாகவே இருந்தது. இர ண்டு நாட்களின் பின் ஒரு மாலை நேரம் அமுதனின் நெற்றியில் அன்பானதொரு கரம் தவழ்ந்தது.

'யார்'? அவன் கண் விழிக்க முயன்றான். இயலவில்லை. அவனால் இயன்ற மட்டும் பலத் தைத் திரட்டி விழித்தான்.
"அம்மாவா?"
'இல்லை, அது ...அம்மா...இல் லை...அம்மா வரமாட்டாள். அவ ளால் வர முடியாது

* *

மூதூரில் இருந்து சிறிது தூரத் தில் முன்னம் போடி வேட்டை என்ற கிராமம் உள்ளது. எங்கு பார்த்தாலும் பரந்த வயல்வெளி கள். நல்ல செழிப்பான கிராமம். அந்தக் கிராமத்தில் கந்தருக்கு ஓரளவு நல்ல பெயர் இருந்தது. நேர்மையான மனிதர்.

கந்தருக்கு மூன்றும் 'பெடியள்' தான். அமுதன் பிறந்த அடுத்த வருடமே கந்தர் ஐந்து ஏக்கர் வயல்க் காணியை வாங்கினார். அவன் பிறந்த காலம் தான் தனக்கு நல்ல காலம் பிறந்தி ருக்கு என்பது அவரின் கருத்து. ஆனாலும் அம்பிகைக்கு கவ லைதான். தனக்கு பெண் குழந்தைகள் ஒன்றும் இல்லை என்ற கவலை அவளுக்கு இருந் தது. கடைசியாக அம்பிகையின் ஆசையை நிறைவேற்ற நிலா பிறந்தாள்.

அமுதனுக்கு அம்மாவிலும், தங் கச்சியிலும் சரியான விருப்பம். அம்மா சமைப்பாள். அவன் தங் கச்சியோடு விளையாடிக் கொண் டிருப்பான். அண்ணன்மாருடன் வயல்ப் பக்கம் போவான். கந்தர் மகளைச் சேற்றுக்குள் இறங்க விடமாட்டார். சில நேரங்களில் மட்டும் வேலைகளெல்லாம் முடிந்தபின் ஆற்றிற்குக் குளிக் கப்போவார்கள். அமுதன் அந்த ஆற்றங்கரை முழுவதும் ஓடுவான் - அலைவான். அண்ணன்மாரின் முதுகில் தொங்கியபடியே ஆற்றில் குளிப்பான்.

அந்த ஆறுதான் எவ்வளவு அழ கானது. அமைதியாக ஓடுதோ- நிற்குதோ என்று தெரியாமல் மெதுவாகத் தளம்பி நிற்கும். இந்த ஆறு சில நேரங்களில் மட் டும் வெறிகொண்டு பாயும். அந்த நேரங்களில் எந்த மனிதருமே ஆற்றில் இறங்க மாட்டார்கள். அன்றிரவு முழுவதும் மழைவி டாது பெய்து கொண்டிருந்தது. கந் தருக்குக் கவலையாக இருந்தது. இப்படி மழை பெய்தால் பயிர்க ளைத் தண்ணி மூடிவிடும். இரவு முழுவதும் அவருக்கு தூக்கம் வரவில்லை. விடிந்தது. சற்றுத் தள்ளி வெடிச் சத்தங்கள் கேட் டன.

கந்தர் கலவரத்துடன் எழும்பி வெளியே பார்த்தார். கிராமத்தவர் கள் பெருவாரியாக ஓடி வந்தார் கள்.

"ஆமிக்காரர் வாறாங்கள்" அவர் கள் தொடர்ந்தும் ஓடினார்கள்.



ஆறு ஆழமில்லாமல் இருந்தது—
கோபமில்லாமல் அமைதியாக ஓடியது.
" சீ...... இந்த ஆறு அண்டைக்கும் இப்பிடியே
ஓடியிருந்தால்.. ...
அந்த நினைவு நெஞ்சை பாரமாக அழுத்தியது.

அம்மா தங்கச்சியைத் தூக்கி னாள். அப்பா அமுதனைத் தூக் -கினார். அவர்களும் ஓடினார்கள்.

'எங்கட கிராமம், எங்கட வீடு, நாங்கள் ஏன் ஓடுறம்'அமுதனுக்கு விளங்கவில்லை.

அவர்கள் ஆற்றங்கரை ஓரமாகப் போய்நின்றார்கள். எனி ஓடே லாது. ஓடுவதென்றால் ஆற்றைக் கடக்க வேண்டும். இந்த நேரத் தில் ஆற்றில் இறங்குவது ஆபத் தானது என்பது எல்லோருக்குமே தெரியும். ஏனெனில் நேற்றுப் பெய்த மழையின் வெள்ளத்தால் ஆறு பொங்கிப் பாய்ந்து கொண் டி ரு ந் த து

வெடிச் சத்தங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன.

'வாறாங்கள் வாறாங்கள் ஓடுங்கோ"

தொடர்ந்தும் நிற்க இயலாது, அவர்கள் ஆற்றுக்குள் இறங்கி னார்கள்.அம்மாவிடம் இருந்து தங்கச்சியை அண்ணன் வாங்கிக் கொண்டான்.

அவர்கள் நடந்தார்கள். தண்ணீ ரின் அளவு சிறிதுசிறிதாக உயர்ந் தது.

இடுப்பளவு தண்ணி பாய்ந்தது. சிறிது தூரத்தில் நெஞ்சளவிற்கு உயர்ந்தது. ஆற்றின் இழுவை அதிகமாக இருந்தது.

அந்த நேரம் தான், அம்மாவின் கால்களை இரக்கமில்லாத கல் ஒன்று இடறியது.
ஐயோ! அம்மா......
அவர்களின் கண்களிற்கு முன் பாகவே அம்மாவை இழுத்துக் கொண்டு ஆறுபாய்ந்தது. அவள் போராடினாள் - தத்தளித்தாள். கைகளை உயர்த்தி-உயர்த்திக் காட்டினாள்.

அம்மாவின் அந்த அவலம் நிறைந்த கையசைப்பைத்தான் அமுதன் இறுதியாகப் பார்த்தான்.

அந்த ஆற்றுக்குள் அம்மா எங் கேயோ காணாமல்போனாள். அவளுக்குப் பின்னாலேயே வேறொரு பெண்ணும் அவள் தூக் கிவந்த அவளின் குழந்தையும் ஆற்றில் இழுத்துச் செல்லப்பட் டார்கள்.

கந்தர் இரண்டு நாட்களாக அந்த ஆற்றின் கரை எங்கும் மனைவி யின் உடலைத் தேடி விட்டு, சோர்ந்துபோய் வந்தார். பிள் ளைகள் அம்மாவைக் காணாமல் தவித்தார்கள். கந்தராலும் மனைவியின் இழப்பைத் தாங்க முடியவில்லை.

அதன் பின்பு பிள்ளைகளுக்கு அம்மாவும் அப்பாவும் கந்தர் தான். அந்தச் சம்பவத்தின் பின்பு கந்தர் பெரிதும் மாறிவிட்டார். இரவுகளில் நாய்கள் குலைத்து கிராமத்தை விழிக்கச் செய்யும் - அதன் பின்பு நன்றாக பழகியவர் களைக் கண்டு விட்ட குதூகலிப் போடு முக்கி முனகுங்கள்.

அப்பா எழும்பி வீட்டின் 'செத் தைக்கால்' வெளியே பார்ப்பார்.. அமுதனும் பார்ப்பான். சிலர் நிற் பார்கள்- கைகளில் ஆயுதங்கள் தெரியும்,

' அண்ணை' அவர்கள்தான் இனிய தமிழில் அழைப்பார்கள். அப்பா கதவைத் திறந்து கொண்டு அவர்களிடம் ஓடுவார். அமுதனும் ஓடுவான். விடிவதற்கு முன் வந்தவர்கள் மறைந்து விடுவார்கள்.

அமுதன் வளர்ந்து கொண்டிருந் தான், இப்போதெல்லாம் கந்தர் புது வேகம் வந்தவர்போல் நடந் தார். பகலில் வீட்டிற்குள் பொருட் கள் நிரம்பும் - இரவில் வரும் 'அவர்கள்' அதனை கொண்டு போய் விடுவார்கள்.

நாட்கள் சென்றன. இராணுவம் வருவது நின்று போனது, இப் போதெல்லாம் பகலிலும்அந்த இளைஞர்கன் வந்தனர்- நின்ற னர்.

காலங்கள் மாறின, மொழி மாற்றத் தோடு பச்சைப் பேய்கள் வந்து குவிந்தனர். அவர்களுடன் இந்த மண்ணில் பிறந்த சிலதுகளும்.....- திரும்பவும் அதே பழைய வெடிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. - கிராமத்தவர்கள் ஓடத்தொடங் கினார்கள்.

ஒரு நிலவில்லாத இரவு - கந்த ரின் காணி முழுவதும் அந்த அன்னியப் பேய்கள் வந்து நின் றனர். அவர்களுடன் வேறு சில ரும் ...., கந்தர் வீட்டின் வெளியே இழுத்துச் செல்லப்பட்டார்.

'டே , எல். ரீரீ தானே ?" அரை குறைத் தமிழில் உயர்ந்து வளர்ந்து தலைப்பாவுடன் நின்ற ஒருவன் உறுமினான்.
'அடே, புலிகள் இங்க வாறவங் கள் தானே -நீயும் புலி தானே ' நல்ல தமிழில் ஒருவன் கேட் டான்.

கந்தருக்குத் தெரிந்ததுதான்- இந்த மண்ணில்தான் இந்த நாட் டுக்காக உயிரைக் கொடுப்பவனும் இந்த நாட்டை விற்றுப் பிழைப் பவனும் தோன்றி மறைகின்றான்.

கந்தர். பதில் சொல்லவில்லை. அந்தத் தேச விரோதியின் முகத் தில் விழிக்கக்கூட அவர் விரும் பவில்லை. அந்தப் பேய்கள் அவரை இழுத்துச் சென்றார்கள்.

விடிந்தது - புற்களில் பட்டிருந்த பனித்துளிகள் காயும் முன்பே ஒருவன் ஓடி வந்தான். அந்த ஆற் றில் அப்பாவின் உடல் எங் கேயோ மிதப்பதாக வந்தவன் சொன்னான்.

அமுதனும் அவன் அண்ணன் மாரும் ஓடினார்கள், அப்பாவைக் காணவில்லை. ஆற்றின் கரை எங்கும் ஓடினார்கள்- தேடினார் கள். ஆட்களற்ற காட்டுக் குறை களில்.....ஆற்றின் கரைகளில் இருந்து இதயம் வெந்து அழுதார் கள். அம்மாவைப் போன்றுதான் அப்பாவையும் அவர்கள் அதன் பின்பு காணவே இல்லை.

நாட்கள் சென்றன. மூத்தண்ணன் திருமணம் செய்து கொண்டான். இப்போதெல்லாம்- சின்னண் ணன்தான் அப்பாவிற்கும் அம் மாவிற்குமாக வீட்டில் நின்றான். எப்போதாவது சில நேரங்களில் இந்தத் தேசத்தை நேசிக்கும் அதன் விடுதலைக்காகப் போராடும் இளைஞர்கள் வரு வார்கள்.

சின்னண்ணன் அவர்களிடம் ஓடிப்போவான். அப்பாவை மாதிரி அவனும் ஓடி ஓடி வேலைகளைச் செய்வான்,

இந்தத் தேசத்துக்கு வரும் வெளிச்சத்தை மறைத்து நின்ற அன்னிய இருள் மேகங்கள் வில கப் போவதாகச் செய்தி பரவியது. மக்கள் தங்களுக்குள் கதைத்துக் கொண்டார்கள். மனதிற்குள்- முகத்திற்குத் தெரியாமல் சிரித் துக் கொண்டார்கள்.

அந்த நாட்களில் தான், ஒரு காலை நேரம் நகருக்குள் சென்ற

தொடர்ச்சி 9ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மரணத்தை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தினந்தோறும் மரணத்தை எதிர்பார்த்து பயந்து பயந்து அடிமையாய் வாழ்வதை வெறுப்பதனால் வீரமரணத்தை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கின்றோம். தேச விடுதலை நோக்கிய அர்த்தமுள்ள மரணங்கள் ஒவ்வொன்றுமே இந்த மண்ணின் ஒவ்வொரு அங்குலத்தையும் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது.

மேஜர்- முரளியும் இப்படியானவர்களில் ஒருவனாக மரணித்து இன்று எல்லோர் மனங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கின்றான். அந்நிய தேசங்களில் தங்களின் வாழ்க்கையை ஆழப்படுத்தியவர்களிற்கும், அதற்காக முனைபவர்களுக்கும் இவனது வாழ்க்கை ஓர் ஆராய்ச்சிக்குரிய வரலாறு. முரளியின் வாழ்நாளில் சில ஆண்டுகள் வெளிநாடு ஒன்றிலே நகர்ந்து கொண்டிருந்தது. அந்த நாட்களில் சிங்களப் பேரினவாதம் தமிழின அழிப்பை விஸ்தரித்துக் கொண்டிருந்தது. தமிழர்களின் சமூக முன்னேற்றத்திற்கான ஒவ்வொரு துறைகளிலும் இனவாதம் தன்கோரப் பிடிகளை இறுக்கத் தொடங்கியது. இந்த நிகழ்வுகளின் பிரதிபலிப்புகள் அந்நிய தேசத்தில் இருந்த முரளியின் உணர்வுகளை ஆழப்பாதித்தன.

'உரிமையை வேண்டி எம் உணர்வுகள் திரும்பாதவரை அடிமை வாழ்வை நாம் அங்கீகரித்தவர்களாவோம்.' என்ற யதார்த்த வடிவம் அவன் சிந்தனையில் உறைய, அவன் தன்தேசத்திற்கான கடமையினைச் செய்யத்தயாரானான். ஆரம்பத்தில் தான் இருந்த நாட்டில் இருந்தே தன் பணியினை தொடங்குகின்றான்.

'சோசலிச ஜனநாயகக் குடியரசு' என்று தன்னைப் பிரகடனப்படுத்தியுள்ள சிறீலங்காவின், தமிழர்களிற்கெதிரான இனவெறி ஒடுக்குமுறைகளை அம்பலமாக்கும் பிரச்சார நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த முரளி, பின் தன்னை ஒரு முழு நேரப் போராளியாக்கி தான் பிறந்த மண்ணிலேயே தன் கடமைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற அவாவுடன் இந்தியாவிற்கு போர்ப் பயிற்சியை பெறுவதற்காக வந்து சேர்ந்தான்.

அவன் நினைந்திருந்தால் இளமையான தன் நாட்களை அவன் ஏற்கனவே இருந்த அந்த வெளிநாட்டிலேயே களித்தும், உழைத்தும், தன் உறவுகளை அழைத்தும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் தான் சார்ந்த இனத்தின் கடமையினையும், இந்த மண்ணின் அவலத்தையும் மிதித்து வாழ்வதற்கு அவனது உணர்வுகள் இசையவில்லை.

இந்தியாவில் போர்ப்பயிற்சியினை முடித்துக் கொண்டுR முரளி தமிழீழம் வந்து, தாயக மண்ணில் தேசவிடுதலைக்கான தன் பணிகளை ஆரம்பித்தான். ஆரம்பத்தில் முரளி மக்களுடன் அன்பான உறவுகளை வளர்த்து அதனூடாக இத் தேசத்தின் விடுதலையின் அவசியத்தையும் அதற்கான ஒவ்வொருவரினதும் கடமையினையும் தெளிவுபடுத்தும் பணியில்ஈடுபட்டு வந்தான்.

சிறீலங்கா இராணுவம் யாழ்ப்பாணத்து வீதிகளில் ரோந்து வந்த அந்த நாட்களிற் தான் இவனது அரசியல் வேலைகளும் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. இராணுவத்தினர் அங்கும், இங்கும் புலிகளைத்தேடி அலைந்து திரியும்போது அதற்குள் கிடைக்கும் இடைவெளிகளினூடு இவனது துவிச்சக்கரவண்டி நுழைந்துகொண்டு தன் பணியினை மேற்கொள்ளும். பொழுது புலர்ந்த நேரத்திலும் இரவின் நிசப்தம் நீடித்த வேளையிலும் முரளியின் துவிச்சக்கரவண்டி வாழைத்தோட்டங்கள், செம்மண் வரப்புகள், குச்சொழுங்கைகள் ஊடாக தேசவிடுதலையின் சுமையினைத் தாங்கிச்செல்லும்.

பிரதேச ரீதியாக அரசியல் வேலைகளைச் செய்து வந்த முரளி 85 ஆம் ஆண்டு கடைசிக் காலப்பகுதியில் தமிழீழத்தில் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் பொறுப்பினை ஏற்றான்மாணவர் மத்தியில் தனது பணிகளை ஆழப்படுத்திய முரளி, ஒவ்வொரு மாணவ உள்ளங்களுடனும் அன்பான முறையில், தோழமையுடன் பழகுவான். சிறிலங்கா இனவாத அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்வி ஒடுக்கு முறையால் தமிழ்மாணவசமுதாயம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும் இதன் பாதிப்பினால் தமிழ்ச் சமுதாயத்தின் அரசியல், சமூக பொருளாதார துறைகளில் ஏற்படுத்தப்படும் தாக்கங்களையும் பற்றி தெளிவான முறையில் விளக்கங்கள் கூறுவான். இதன் மூலம் இந்த மாணவசமுதாயம் போராட்டத்துடன் இணைந்து நிற்க வேண்டியதன் அவசியத்தை ஆதாரபூர்வமாகவே எங்கள் ஒவ்வொருவரிற்கும் உணர்த்தி நின்றவன் மேஜர் முரளி.

மாணவர்கள், ஆசிரியர்கள், அறிவாளர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி 1986 ஆம் ஆண்டில், 'எம் மக்களின் எதிர்காலத்தை நோக்கி' என்றவொரு பெரும் பொருட் கண்காட்சியை சென் பற்றிக்ஸ் கல்லூரியில் நடாத்தியிருந்தான். இந்தப் பொருட்கண்காட்சி வெறும் கண்காட்சியாக மட்டும் அமைந்திருக்கவில்லை.

தமிழீழ தேசமானது ஒரு பொருளாதார வளமற்ற நாடு என்று கூறித்திரிந்தவர்களிற்கு ஒரு ஆச்சரியக் குறியாக இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது. ஆம்! தமிழீழமானது தங்கு நிலை அற்ற பொருளாதாரத்தை கட்டி எழுப்பக் கூடிய அனைத்து வளங்களையும் கொண்டநாடு. இதில் சமூக, விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளும், துறை சார்ந்தவர்களும், ஏனைய மக்களும் தங்கள் அனைத்து வளங்களையும், ஆற்றலையும் தமிழீழ தேச விடுதலைக்காக அர்ப்பணிப்பார்களாயின் விரைவாக, சுய பொருளாதாரங் கொண்ட தமிழீழத்தை உருவாக்க முடியும் என்ற ஆதார பூர்வமான தெளிவான விளக்கத்தைக் கொடுப்பதாக இது இருந்தது.

எல்லா மாணவர்களினதும் நலன்களில் அக்கறை கொண்டவனான முரளி, அவர்களுக்கென கல்வி வளர்ச்சிக் கழகங்களை நிறுவியும், அவர்களிற்கான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியும் வந்தான்.

முரளி அடிக்கடி கூறிக்கொள்வான், 'சிறீலங்காவின் இராணுவ இயந்திரங்கள் தமிழீழ மண்ணில் இருந்து அகற்றப்பட்டால்தான் தமிழீழம் தன் இறைமையுடன் மீண்டும் நிமிர்ந்து நிற்கும்' தனது சொல்லுக்கேற்பவே முரளி பல இராணுவத் தாக்குதல்களிலும் பங்கு கொண்டான். 23/3/87 இல் யாழ்ப்பாண பொலிஸ் நிலையவிடுதி மீது நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலிலும் தன்னை இணைத்துக் கொண்டான். இத் தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டபோது இவன் களத்திலே விழுப்புண்களை தனதாக்கிக் கொண்டான்.

அமைதி காக்கவென்று இங்கு வந்த இந்திய இராணுவம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க முயன்றது. இதன் மூலம் தமிழ்த்தேசிய இனத்தையே அழிக்க முயன்றபோது வெடித்த இந்திய- தமிழீழப் போரில் இவன் பல களங்களில் நின்று போராடினான்.கோப்பாய் பகுதியால் முன்னேறிய இந்திய இராணுவத்தை எதிர்த்துநின்ற அணிக்கு இவன் தலைமை தாங்கிச் சண்டையிட்டான்.

இந்திய இராணுவம் குடாநாட்டினுள் தன் நடமாட்டத்தை தொடங்கியபின்னும் முரளி இங்கு நின்று கொண்டே தன் போராட்டப்பணிகளை மேற்கொண்டிருந்தான். வழமைபோலவே அன்றும்



மேஜர் முரளி

அதிகாலை புலரத் தொடங்குகின்றது. ஆனால் 23/12/87 அன்று மாறாக ...... முரளியின் துவிச்சக்கரவண்டி ஓடித்திரிந்த அந்த வாழைத் தோட்டத்தின் செம்மண் பரப்புக்களில் இந்திய இராணுவம் சுற்றி நிற்கின்றது. சற்று நேரத்தின் பின் அமைதியான அந்தப் பொழுதுகள் துப்பாக்கி வேட்டொலிகளினால் அலங்கோலப்படுத்தப்படுகின்றது. ஆம் அங்கே முரளியும், அவனது தோழர்களும் இந்த மண்ணை முத்தமிடுவதற்கான தங்கள் இறுதி நேரத்தினைச் சந்தித்துக் கொண்டிருந்தார்கள். இந்நேரத்தின் முடிவில் இந்த மண் தன் விடுதலைக்காக இம் மாவீரர்களை எடுத்துக் கொள்கிறது.

## 500 குழந்தைகள்

ஒன்றுக்குச் சராசரி 500 குழந்தைகள் பிரசவிக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டில் (1991) இங்கு ஆறாயிரத்து இருநூறு (6200) குழந்தைகள் பிறந்துள்ளன.
இந்த எண்ணிக்கை முன்னைய ஆண்டுகளை விட அதிகம் என யாழ், ஆஸ்பத்திரிப் பதிவகப் பிரிவு புள்ளி விபரங்களில் இருந்து தெரியவருகிறது.

# நாடுமுழுவதற்குமான அதிகாரம் கொண்ட பாராளுமன்ற முறையை மாற்ற வேண்டும்

கத்தோலிக்க அதிமேற்றிராணியார்.

ஒரு புறத்தில் மிகவும் பலம் பொருந்திய தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களுக்கென தனியான ஒரு நாட்டைக் கோருகின்றனர். 1948 இல் சுதந்திரம் அடைந்த பின்னர் கூட தமிழ் மக்கள் சம அந்தஸ்துள்ள பிரஜைகளாக நடத்தப்படவில்லை என அவர்கள் இதற்குக் காரணம் கூறுகின்றனர். மறு பக்கத்தில் நாட்டைப் பிளவுபடுத்த அனுமதிப்பதில்லை என சிங்கள மக்கள் உறுதியாகவுள்ளனர். பல ஜாதி, பல மொழி பல கலாசார, பல சமயங்களைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் இது மேலும் பிரிவினைக்கு வழிகோலி விடும் என அவர்கள் நியாயமாகவே பயப்படுகின்றார்கள். முரண்பட்டுக் கொண்டுள்ள தரப்பினரின் இவ்விரு கருத்தையும் உண்மையான கருத்து வெளிப்பாடுகளாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். எந்த ஒரு தீர்வும் இதிலிருந்து தான் ஆரம்பமாக வேண்டும். இவ்வாறு கொழும்பு கத்தோலிக்க அதிமேற்ருணியார் அதிவண. நிக்கலஸ் மார்க்கஸ் தான் விடுத்துள்ள இலங்கையின் 44வது சுதந்திரதினச் செய்தியில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது இந்தப் பிரச்சனைக்கு தீர்வாகப் பல மாதிரி அமைப்புக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. சமஸ்டி,- மாகாண சபை, இணைந்த மாகாண சபை. தனிநாடு ஆகியன அவற்றில் முக்கியமானவை. இணைந்த மாகாண சபை சமஸ்டிக்கு சமானது. இது இப்போது கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு பார்க்கையில் - முரண்பட்ட நோக்கங்களுக்காக விசுவாசமாக போராடுபவர்களின் உயிரிழப்புக்களைக் கவனத்திற் கொண்டு பார்க்கையில் -, சாதாரண மக்களின் மரணங்களையும் துயரங்களையும், கவனத்திற் கொண்டும் பார்க்கையில் -, முழுநாட்டிற்கும் ஏற்படும் இழப்பைப் பாக்கையில் பிரிவினைவாதம், தற்போதுள்ள மத்தியில் அதிகாரம் குவிக்கப்பட்ட அமைப்பு ஆகிய இரண்டையும் நாம் கைவிடவேண்டும்.

இதன்பின்னர் எஞ்சி இருப்பது மாகாண சபை அமைப்பாகும்.

இன்றைய நிலையில் கடந்தகால சிபார்சுகளுக்கு பாரிய மாற்றங்களை மேற்கொண்டு மாகாண அமைப்பு முறையில் அக்கறை எடுத்து சகல அரசியல் கட்சிகளும் செயலாற்ற வேண்டும். இப் பாரிய மாற்றங்கள் தான் என்ன?
அவையாவன:-
1. மாகாணசபை மிகவும் சக்தி வாய்ந்த அரசியல் பிரிவாக வோண்டும். ஒரு மாகாண மக்களுக்கு தம்மைத் தாமே ஆளும் உரிமையை அது வழங்க வேண்டும்.
2. இதனை ஆக்கபூர்வமாகச் செய்வதற்காக நாடு முழுவதையும் ஒன்றானதெனக் கருதக்கூடிய விடயங்களில் அதாவது பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கை, நிதி, வெளிநாட்டு உதவி ஆகியவற்றுக்கு மத்திய அரசு அமைப்பின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். விமான நிலையங்கள், முக்கியமான துறைமுகங்கள், பாதுகாப்பு நிலையங்கள் போன்ற விசேட விடயங்களும் இதில் அடங்கும்.

நாடு முழுவதற்கும்மான அதிகாரத்தைக் கொண்ட தற்போதைய பாரளுமன்ற அமைப்பு இல்லாமல் போய்விடும் என்பதை இது குறிக்கும். அதற்குப் பதிலாக சகல சமூகங்களையும் சேர்ந்த நிபுணர்களின் குழு ஒன்றுடன் தேசிய ஜனாதிபதி ஒருவர் இருப்பார். அக்குழுவினரே தேசிய அமைச்சரவையில் இருப்பர்.தேர்தல்களின் போது ஜனாதிபதி அபேட்சகர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்டியலிலிருந்து அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்படுவர். கட்சி எதுவாக இருப்பினும் அவர்கள் ஒரு குழுவாக அதிகாரத்திற்கு வருவார்கள். மாகாண சபைகளின் உள் விவகாரங்களில் தலையிடாமல் அவற்றின் வேலைகளை ஒருங்கிணைப்பதும் மேலே சொல்லப்பட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தீர்மானம் மேற்கொள்ளுவதுமே இவர்களது கடமையாக இருக்கும்.

எந்தவொரு நடைமுறை சாத்தியமான தீர்வையும் சமர்ப்பிக்கும் எவரும் வக்கணைச் சொற்களுக்குள்ளாக வேண்டி வரும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் யாராவது நாட்டுப்பற்றுள்ள பிரஜைகள் மக்களின் நன்மைக்காக இதனைத் துணிந்து செய்ய வேண்டும்.

## தமிழகத்திலிருந்து வந்து அனாதைகளாக திரியும் தமிழ் அகதிகள்

தமிழகத்திலிருந்து இலங்கை திரும்பிய தமிழ் அகதிகள் பலர் உண்ண உணவின்றியும், தங்க இருப்பிடமின்றியும் மாத்தளைப்பகுதியில் கோவில்களில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.
திருமலை, கிளிநொச்சி, கிண்ணியா, கன்னியாவைச் சேர்ந்த 50 குடும்பங்கள் இவ்வாறு கையில் காசின்றி மாத்தளைப் பகுதியில் கோவில்களில் தங்கியிருந்து மதிய வேளைகளில் கோவில்களுக்குச் சென்று அன்னதானத்தை உண்டு வருகின்றனர்.
தகுந்த பாதுகாப்பும், தங்குமிட உணவு வசதியும் செய்து தருவதாக தம்மைக் கட்டாயப்படுத்தி இலங்கைக்குக் கூட்டி வந்து தற்போது அனாதைகளாக விட்டுள்ளதாகவும் தமது சொந்த இடங்களில் வீடு வாசல்கள் தரைமட்டமாகி சுடுகாடு போல் தோன்றுவதாகவும் இந்த அகதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

www.tamilarangam.net

# புதிய உலக ஒழுங்கும்



# தமிழீழப் பொருளாதாரமும்

**தமிழீழத்திலிருந்து த.அன்பானந்தன்**

## அறிமுகம்

1990 களில் உலக அரசியல், பொருளாதார சமூகத்துறைகள் பாரிய மாற்றத்தினைக் கண்டு வருகின்றன. அதேவேளையில் தமிழீழப் போராட்டமும் பரிணாம ரீதியில் பல்முனை வளர்ச்சிப் போக்குகளைக் காட்டி நிற்கின்றது. எனவே எதிர்கால நிலை, அடையாளம் குறித்தும் கல்வி, பொருளாதாரம், கலாச்சாரம் போன்ற துறைகளிலான தமிழீழத் தேசியப் பார்வை குறித்தும் எமது கவனத்தைத் திருப்ப வேண்டியதோர் முக்கிய காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம். இவ்வாறான சூழலில், புதிய சர்வதேச நிலைமைகளையும் போக்குகளையும் கருத்தில் கொண்டு தமிழீழத்தின் பொருளாதார நிலைப்பாடு குறித்த சிந்தனையை வேண்டுவதும் அது குறித்த சில கேள்விகளையும் தேவைகளையும் முன்வைப்பதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## புதிய சர்வதேச ஒழுங்கு

1980களின் இறுதியிலும் 1990 களின் தொடக்கத்திலும் உலகில் நிகழ்ந்த அரசியல் பொருளாதார மாற்றங்கள் மிகவிரைவானதாயும் பலரின் கணிப்புகளைப் பொய்ப்பிப்பதாயும் இருந்தது. இம் மாற்றப் போக்கு 1990 களில் மேலும் விரைவும் வீரியமும் பெறும் என்பதை அண்மைய நிகழ்வுகள் காட்டுகின்றன. கெடுபிடிப்போர் திடீரென ஒரு முடிவுக்கு வந்துள்ளதுடன் மேற்கு - கிழக்கு ஒத்துழைப்பு அதிகரித்து வருகின்றது. இதனால் ஏலவேயுள்ள வடக்கு- தெற்குப் பொருளாதார சமமின்மை மேலும் அதிகரிக்கவும் தென் பிராந்தியங்கள் உலக பொருளாதார உந்து சத்தியால் ஒருபுறம் ஒதுக்கப்படவும் வாய்ப்புக்கள் கூடியுள்ளதாக பேராசிரியர் அந்ரே குந்தர் பிராங்க் போன்ற பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.



உலக வர்த்தக நிலைமை கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தெற்கு பாதகமான போக்கையே கொண்டிருந்தது. மேற்குலக நாடுகளும் - குறிப்பாக அமெரிக்காவும் - அவற்றின் பொருளாதார காவல் நாய்களான சர்வதேச நாணய நிதியம்(IMF) உலக வங்கி, தீர்வைகள் -வர்த்தகம் என்பவற்றிற்கான பொதுவுடன்பாட்டு அமைப்பு (GATT) என்பனவும் வர்த்தக ரீதியில் இந்தச் சமமின்மையை அதிகரிக்கவே உதவிய போதும்' கம்யூனிஸப் பூச்சாண்டி ' யின் நியாயப்படுத்தலின் அடிப்படையிலாவது தெற்குக்கு சில கடனுதவிகளையும் வரையறுக்கப்பட்ட தொழில் நுட்ப உதவிகளையும் வழங்கின. ஆனால் கம்யூனிஸப் பூச்சாண்டிக்குத் தற்போது அவசியமில்லையாதலால் உலக சந்தைப் பொருளாதார அமைப்பில் தெற்கு தனித்து விடப்படக் கூடிய அபாயமும் அதனூடாகப் பொருளாதாரப் பின்னடைவுகளைக் காணக்கூடிய நிலையும் தோன்றியுள்ளது. ஊழியச் சுரண்டலுக்காகப் பல்தேசியக் கம்பனிகளின் தெற்கு நோக்கிய நுழைவு தெற்கின் சில நாடுகளுக்குள் மூலதனப் பாய்ச்சலை ஏற்படுத்திய போதும், இக் க்ம்பனிகளின் நுழைவால் வேறு பல சிக்கல்கள் உருவாகியமை ஒரு புறமிருக்க, மேற்கு- கிழக்கு ஒத்துழைப்பு நடவடிக்கைகளால் தெற்கு நோக்கிய இம் மூலதனப் பாய்ச்சல்கள் கூடப் பாதிக்கப்படலாம். இதேவேளை உலகப் பொருளாதார முறைமையோ, தகவற்பொருளாதார முறைமையூடாகப் பாரிய மாற்றங்களைக் கண்டு வருகின்றது. இதுவும் வடக்கு- யதற்கு இடைவெளியைப் பெருப்பிக்கின்றது. அத்துடன் பேராசிரியர் அந்ரே குந்தர் பிராங்க் கருதுவது போல பொருளியல் நலன்களை வென்றெடுக்க மூன்றாம் மண்டல நாடுகள் நோக்கிய வடக்கின் முதலாவது போரும் (தொடர்ச்சியான மூன்றாம் உலகப் போரின் முதல் கட்டம் என இப் பேராசிரியர் கருதுகிறார்) வளைகுடாவில் நடந்து முடிந்துள்ளது. இக் குணக்குறிகள் அனைத்தும் பொதுவாக மூன்றாம் மண்டல நாடுகள் - குறிப்பாக தென்உலக நாடுகள் - தமது எதிர்காலம் குறித்தும் தமது பொருளாதாரக் கொள்கைகள், சர்வதேச உறவுகள் குறித்தும் பல உத்திகளைக் கையாளவேண்டிய தேவையை உணர்த்துகின்றன

## தமிழீழ பொருளாதார நிலை.

சுதந்திர இலங்கையில் பதவிக்கு வந்த இலங்கை அரசாங்கங்களால் பின்பற்றப்பட்டு வந்த பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இவ் அரசாங்கங்களால் தொடர்ச்சியாகத் தமிழீழப் பகுதிகளின் பொருளாதாரத் தேவைகள், அபிவிருத்தி என்பன புறமொதுக்கப்பட்டதாலும் இராணுவ ஒடுக்குமுறை கண்மூடித்தனமான வான் தாக்குதல்கள் போன்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் தொடர்ச்சியான விடுதலைப் போராட்டம் காரணமாகவும் எமது பொருளாதாரத்தின் சுயமான இயங்குதளம் பலமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இன்றைய பொருளாதார நிலை இலக்கற்ற தடுமாற்றப் போக்காய் உள்ளது.

போராட்ட வளர்ச்சியினால் போராட்ட அமைப்புக்களுள் பெருமளவு இளைஞர்கள் உள்வாங்கப்பட்டமை ஒருபுறமிருக்க இலங்கை -இந்திய இராணுவ அடாவடித்தனங்கள், தேசவிரோதிகளின் அடாவடித்தனங்களால் பெருமளவு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதுடன் கணிசமான அளவினர் அந்நியதேசங்களுக்கு நகர்ந்துள்ளனர். இந்நிகழ்வு எமது உயிரோட்டமுள்ள உழைப்புச் சக்தியின் ஒரு பகுதியைப் பாதித்துள்ளது. எமது தேச அபிவிருத்தி நடவடிக்கையில் இறங்கும்போது இந்த உழைப்புச் சத்தியின் இழப்புத் தெரியவருமெனினும் தெற்காசியப் பொதுப்பண்பான மிகை ஊழிய நிலை நிலைமையை ஓரளவுக்குச் சமாளிக்க உதவக்கூடும். இருந்தபோதும் மூளைசாலிகள் இழப்பு, வெளியேற்றம், பிரச்சினைக்குரியதொன்றாகவே இருக்கும். இத்துடன் எமது உள்ளார்ந்த வளங்கள், ஆற்றல்களை பயன்படுத்த முடியாத இப்போதைய சூழ்நிலையும் இவை குறித்த எதுவித திட்டங்களும் இல்லாமையும் ; யுத்தம் பலதரப்பட்ட பொருளாதார முயற்சிகளை முடக்கியுள்ளமையும் ; இராணுவத் தாக்குதல்கள், வான்தாக்குதல்கள் என்பன எமது தேசிய வளங்கள் சொத்துக்களில் பாதிப்பினை ஏற்படுத்திவருவதும் எமது கல்வி நிலைமைகள் குழப்பமடைவதும்; உடனடிக்கவனிப்புக்குரிய அம்சங்களாகும். அதுவும் உலகின் மாற்றங்களைக் கவனத்திற் கொள்கையில் நாங்கள் எதிர்காலத்தில் சர்வதேச ரீதியில் நின்று பிடிக்கவும் எமது அடையாளத்தை உறுதிப்படுத்தவும் நாம் உடனடியாகச் செயலில் இறங்க வேண்டியது காலத்தின் கட்டாயமுமாகும்.

இந்த வகையில் பொருளாதார ரீதியில் மூன்று முக்கிய விடயங்கள் முன்னுரிமை பெறுவதாக நான் நினைக்கின்றேன்.

அ) தமிழீழத்திற்கான பொருளாதார அமைப்பினையும் அதன் கொள்கையையும் நிர்ணயித்தல்.

ஆ) தீர்மானிக்கப்பட்ட அமைப்புக் கொள்கைகளுடன் பெருமளவிற்கு முரண்படாத வகையில் இன்றைய போர்க்காலச்சூழலில் பின்பற்றப்பட வேண்டிய பொருளாதார நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடலும் தீர்மானித்தலும்.

இ) எமது பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஆற்றல்களை இனம் காணவும் அபிவிருத்தி செய்யவும் திட்டமிடவும் பல துறைகளிலும் தொடர்ச்சியான ஆய்வினை மேற்கொள்வதுடன் இவற்றின் பெறுபேறுகளுக்கமைய செயற்திட்டங்களை உருவாக்குதலும், மீளமைத்தலும்.

## தமிழீழத்திற்கான பொருளாதார அமைப்பு

தமிழீழத்திற்கான பொருளாதார அமைப்பொன்றைத் தீர்மானிப்பதற்குதவியாக உலக அனுபவத்தில் வெற்றிகரமான பொருளதார அமைப்புக்கள் பற்றி நோக்குவது நலன் பயக்கும். முதலாம் உலகப் போருக்கு பின்னர் உலகில் முதலாளித்துவம், சோசலிஸம் இன்னும் இரு பொருளாதார அமைப்புக்களே தம்மை நிலை நிறுத்திக் கொண்டன. இது வரைவேறு வகையான உயிர்ப்புள்ள பொருளாதார அமைப்புப் பற்றி சிந்தனை ஒன்றும் முன் வைக்கப்படவில்லை. எனினும் இவற்றின் வெற்றி தோல்விகளை கருத்திற் கொள்ளின் 1914,1930, 1949,1958,1967,ஆம் ஆண்டுகளையொட்டி நிகழ்ந்த பொருளாதார நெருக்கடிகள் தூய முதலாளித்துவக் கோட்பாட்டை நிராகரித்தன. அண்மைய சோவியத், கிழக்கைரோப்பிய, சீன அனுபவங்கள் தூய சோசலிஸக் கோட்பாட்டினையும் நிராகரிக்கின்றன.

சமூகநலப் பொருளாதாரக் கொள்கைகளிலும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான சில கொள்கைகளிலும் மேற்குலக முதலாளித்துவப் பொருளாதாரம் அரசதுறைப் பங்களிப்பைக் கொண்டுள்ளன. பல சோசலிஸ நாடுகள் வரையறுக்கப்பட்ட சந்தைப் பொருளாதாரத்தை அனுமதித்துள்ளன. எனவே முதலாளித்துவம், சோசலிஸம் என்பனவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள், கொள்கைகள் என்பன வெவ்வேறளவுகளில் கலக்கப்பட்டுள்ள பொருளாதார முறைமையே பொதுவாக உலகெங்கிலும் காணப்படுகின்றது. எனினும் முதலாம் உலக நாடுகள் எனப்படுபவை - குறிப்பாக மேற்குலகம் பெருமளவிற்குச் சந்தைப் பொருளாதாரத்தையும்; சோசலிஸ அல்லது இரண்டாம் உலக நாடுகள் பெருமளவிற்கு மையப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்பையும் மூன்றாம் மண்டல நாடுகள் இவை இரண்டிற்கும் இடைப்பட்டதொரு கலப்புப் பொருளாதார அமைப்பையும் பின்பற்றி வந்துள்ளன.

எனினும் முதலாளித்துவம் ஆரம்பத்தில் சுயசார்பு கருதுகோளிலிருந்து பாரிய கைத்தொழில் விரிவாக்கக் கொள்கைக்கு மாறித் தொடர்ந்து வர்த்தகப் பொருளாதாரக் கொள்கைக்கும் பின் இன்று தகவற் பொருளாதாரமாக வளர்ந்து வருகின்றது. எனினும் 1988, 1989, 1990, 1991 ஆம் ஆண்டுகளில் பங்குச் சந்தை வீழ்ச்சி, நிதிச் சந்தைச் சரிவுபோன்ற நெருக்கடிகளை இது சந்தித்து வந்ததுடன் முதலாளித்துவத் தலைமைநாடான அமெரிக்கா, பாதகமான வர்த்தக நிலுவைகளையும் மிகப் பெரியளவிலான கடன்படுகையையும் கொண்டிருந்தது. தமது பொருளாதாரச் சரிவுகளைச் சமன் செய்ய' அமெரிக்க வழமை' போலவே இம்முறையும் வளைகுடாப் போர் பயன்பட்டது. எனினும் புதிய நெருக்கடிகளுக்கான வித்துக்களைத் தன்னகத்தே கொண்டதாகவே முதலாளித்துவத் தகவற் பொருளாதாரம் வளர்ந்து வருகின்றது. மையப்படுத்தப்பட்ட பொதுவுடமைப் பொருளாதாரங்கள் மூலதன [illegible]ன்மை, உற்பத்தித்திறன் வீழ்ச்சி, ஊழல், பற்றாக்குறை போன்ற நெருக்கடிகளால் அண்மையில் பாரிய மாறுதல்களைத் தமது பொருளாதாரத்துள் பரீட்சிக்கின்றன.

இவை இரண்டினதும் நல்ல அம்சங்களை அமுலாக்க முனைந்த கலப்புப் பொருளாதாரங்கள் மூலதன நெருக்கடி, பாதக உலக வர்த்தகம், ஊழல், அரசியல் தலையீடுகள் தொழில் நுட்பவியல் ஆற்றற் குறைவு, கடன்சுமை, உள்நாட்டுக்குழப்பங்கள், தங்கியிருக்கும் தன்மை போன்ற பல நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளன. இவற்றையும் இன்றைய உலக நிலையையும் ஆய்வு செய்த பேராசிரியர் சாமிர் அமின் போன்ற பொருளியல் அறிஞர்கள் மூன்றாம் மண்டல நாடுகளுக்கும், சோசலிஸ நாடுகளுக்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைப் பொருளாதார அமைப்பொன்றைச் சிபார்சு செய்கின்றனர். விடுதலைப்புலிகளின் அரசியல் வேலைத்திட்டம் பற்றிய வெளியீடான' சோசலிஸத் தமிழீழம்' எனும் புத்தகத்தில் ' மத்திய அரசின் குறுகிய வட்டத்திற்குள் அல்லாது ஜனநாயக ரீதியில் , சுயாதீனமான முறையில் தேசிய பொருளாதாரத் திட்டம் வகுக்கப்படுவதையும் செயற்படுத்தப்படுவதையும் விடுதலைப்புலிகள் இயக்கம் ஊக்குவிக்கும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சாமிர் அமினின் மேற்படி சிபார்சு எமது தேசக் கொள்கைத் தீர்மானிப்பாளர்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றே என்பது புலனாகின்றது.

(தொடரும்)

### தேவாலயத் திருட்டு பொது மக்களால் முறியடிப்பு

பாஸையூர் அர்ச். அந்தோனியார் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி பொது மக்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தேவாலயத்தின் தெற்குப் புற வாசலை உடைத்து திருடர் கோஸ்டியொன்று உட்சென்று ஆராதனை வேளைகளில் பாவிக்கப்படும் விலையுயர்ந்த பரிசுத்த பாத்திரங்களை மூட்டையாக கட்டிக் கொண்டு வெளியேற முற்பட்டபோது, மீன் பிடிக்கச் சென்ற சில தொழிலாளர்கள் இதை அவதானித்து அயலவர்களின் உதவியுடன் திருடர்களைப் பிடிக்க முற்பட்டார்கள். திருடர்கள், திருடிய தேவாலயப் பொருட்களையும், தாம் வந்த சைக்கிளையும் கைவிட்ட நிலையில் இருளில் ஓடி மறைந்து விட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிகழ்வும் நினைவும்

'நிகழ்வும் நினைவும்' பகுதி குறித்த அபிப்பிராயங்கள், விமர்சனங்களை எழுதுமாறு கேட்டிருந்தமைக்கிணங்க லண்டனிலிருந்து யேசுதாஸ் என்பவர் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இக் கடிதத்தில், 'மீண்டும் இலங்கை-இந்திய ஒப்பந்தமா?' என்ற தலைப்பில் இப்பகுதியில் எழுதப்பட்ட விடயங்கள் குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

கருத்து ரீதியான விவாதங்களையும் விமர்சனங்களையும் தொடர்வதற்கு இவரது இக் கடிதம் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இக் கடிதத்தில் யேசுதாஸ் குறிப்பிட்டிருந்த விடயங்களையும் அது குறித்த எனது கருத்துக்களையும் அடுத்த இதழின் 'நிகழ்வும் நினைவும்' பகுதியில் நோக்குவோம்.

## தமிழீழக் கலைஞர்களும் புலம்பெயர்ந்த கலைஞர்களும்

திலீபன்

இன்றைய 'நிகழ்வும் நினைவும்' கலை சார்ந்த விடயங்களை உள்ளடக்குகின்றது.

தமிழீழத்திலிருந்து வெளியாகியிருந்த 'சிரித்திரன்' ஐப்பசி- கார்த்திகை 91 இதழ் அண்மையில் எனது கைக்குக் கிடைத்தது.

இவ்விதழில் 'நாதநாதனுடன் சில நிமிடங்கள்' எனும் தலைப்பில் நாதஸ்வர மேதை அளவையூர் பத்மநாதன் அவர்களுடனான செவ்வி வெளியாகியிருந்தது.

இச் செவ்வியில் திரு. பத்மநாதன் அவர்கள் , 'நாம் வாசிக்கும் நாதஸ்வரக் கருவி பல ஆண்டுகளாக இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு வந்தது. இக் கருவியை எமது சொந்த மண்ணில் உருவாக்க வேண்டும் என்ற எண்ணக்கரு முதன் முதலில் அராலியைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் திரு. அமரலிங்கத்தின் உள்ளத்தில் உருவானது. பல வருட கால விடா முயற்சியின் பலனாக திரு. அமரலிங்கத்தால் நாதஸ்வரக் கருவி நம் மண்ணில் உருவாக்கப்பட்டது. இக் கருவியை நமது நாதஸ்வர வித்துவான்கள் இன்று பயன்படுத்தி வருகின்றனர். நானும் இக் கருவியைப் பயன்படுத்தி 'இந்தமண் எங்களின் சொந்த மண்' என்ற எமது மண் பாடலை வாசிக்கும் போது எவ்வளவு ஆனந்தம் ஏற்படுகின்றது.' என ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை வாசித்தபோது தமிழீழத்தில் இன்றுள்ள கலைஞர்களின் உணர்வுகளின் வெளிப்பாடாக திரு. பத்மநாதன் அவர்களின் இக் கருத்தினை உணர முடிந்தது.

எமது மண்ணிலேயே உருவாக்கப்பட்ட இசைக் கருவி மூலம் எம் தாயக மண் பற்றிய பாடலை வாசிக்கும் போது இக் கலைஞனுக்கு ஏற்படும் ஆனந்தம் ஓர் உண்மையான தேச பக்தனுக்கு உரியது.

விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் எந்த ஒரு சமூகத்தின் மத்தியிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்கள் தமது கலை வெளிப்பாட்டின் மூலம் தம் சமூகத்தின் விடுதலைக் குரலினை வெளிப்படுத்தும் கடமையினை தம்மகத்தே கொண்டுள்ளனர்.

இந்த வகையில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்போடு முன்னெடுத்துச் செல்லப்பட்டு வரும் இவ் வேளையில் தமிழீழத்தில் வாழும் கலைஞர்கள் தமது தேசிய கடமையினை செவ்வனே செய்து வருகின்றனர்.

இசை, நாடகம், நடனம், ஓவியம், சிற்பம், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளிலும் மக்களின் உணர்வுகளையும் போராட்ட நிகழ்வுகளையும் தமிழீழக் கலைஞர்கள் தமது கலை வெளிப்பாடுகளில் இன்று பிரதிபலித்துக் கொண்டிருக்கின் றார்கள்.

### புலம் பெயர்ந்த கலைஞர்கள்

புலம் பெயர்ந்து வெவ்வேறு நாடுகளிலும் சிதறடிக்கப்பட்டுள்ள நமது கலைஞர்கள் இன்று எத்தகைய நிலையில் உள்ளனர்?

ஐரோப்பாவிலும் ஏனைய நாடுகளிலும் இன்று வெளிக் கொணரப்படும் கலை வெளிப்பாடுகளை நோக்கும் போது புலம் பெயர்ந்த கலைஞர்களும் தம்மால் இயலக்கூடிய கலை முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது. இது ஆறுதல் தரக்கூடிய விடயம்.

ஆனால் கலைஞர்கள் தம்மால் படைக்கக் கூடிய படைப்புக்களை முழுமையாகப் படைக்கக் கூடிய புறச் சூழல் வெளிநாடுகளில் நிலவுகின்றதா?

ஒரு கலைஞனின் கலை உணர்வுக்கும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையிலுள்ள ஒரு மனிதனின் பொருளாதாயத் தேவைகளுக்குமிடையில் ஒரு பெரும் போராட்டம் இன்று நடந்து கொண்டிருக்கின்றது.

இந் நிலையில், பொருளாதாய நலன்களைப் பெற்றுத்தர முடியாத கலை முயற்சிகளில் ஈடுபடுவதற்காக பொருளாதாய நலன்களைப் பெற்றுத் தரக்கூடிய தொழில் முயற்சிகளைக் கைவிட முடியாத நிலையில் இன்று பல கலைஞர்கள் உள்ளனர்.

இதனால் தமக்கு நேரம் கிடைக்கும்போது மட்டுமே கலைமுயற்சிகள் குறித்து செயற்பட வேண்டிய நிலையில் பல புலம் பெயர்ந்த கலைஞர்கள் உள்ளனர். கலைத்துறையில் அர்ப்பணிப்போடு ஈடுபடும் கலைஞர்கள் சில பொருளாதாய நலன்களை தியாகம் செய்ய வேண்டியே உள்ளது.

பெரும்பாலான கலை முயற்சிகள் ஒரு கூட்டு முயற்சியின் விளைவேயாகும். உதாரணமாக, நாடகத்தினை எடுத்துக் கொள்வோமாயின் நெறியாளரில் இருந்து திரை விலக்கும் பணியினைச் செய்பவர் வரை சகல கலைஞர்களையும் உள்ளடக்கிய கூட்டு முயற்சியாகவே இந் நாடக வெளிப்பாடு அமைகின்றது.

இத்தகைய கூட்டு முயற்சிகளை செய்ய முற்படும் போது புலம் பெயர்ந்த கலைஞர்கள் பல பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டியும் நேரிடுகின்றது. இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவோர்கள் நேரமின்மை, தேவையான, திறமையான கலைஞர்களை ஒன்றிணைக்க முடியாமை உட்பட பல்வேறு பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர்.

இத்தகைய வரையறைகளை புலம் பெயர்ந்த கலைஞர்கள் கொண்டிருந்த போதும் இன்றைய நிலையில் இவர்களது கடமையினை இக் கலைஞர்கள் கவனத்தில் கொண்டேயாக வேண்டும்.

### புலம் பெயர்ந்த கலைஞர்களின் கடமை

இன்று புலம் பெயர்ந்து வாழும் தமிழர் சமூகத்தின் மத்தியில் உள்ள கலைஞர்கள் முன்னிலையில் பெரும் கடமை காத்திருக்கின்றது.

புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையே தாயகப் பற்றினை வளர்த்தெடுக்கவும் மக்களிடையே ஊடுருவிக் கொள்ளும் போலி மயக்கங்களைக் களையவும் தமிழீழ மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்துடன் புலம் பெயர்ந்த மக்களை உணர்வு பூர்வமாக இணைய வைக்கவும் உழைப்பதற்கு கலைஞர்கள் உறுதி பேணவேண்டும்.

தமிழீழத்தில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டமே புலம் பெயர்ந்துள்ள தமிழ் மக்களினது பல பிரச்சனைகளுக்கும் விடிவினைப் பெற்றுத் தரக்கூடியது என்பதனை தூர நோக்கோடு மக்களுக்கு உணர்த்தும் பணியில் கலைஞர்கள் உற்சாகமாக ஈடுபடவேண்டும்.

எமது தாயக மண்ணையும் மக்களையும் நேசிக்கும் கலைஞர்களாலேயே இதனை மேற்கொள்ள முடியும்.

இச் சூழலில், வெளிநாடுகளில் இயந்திரமயமான வாழ்க்கைச் சூழலிலும் தமது நேரத்தை ஒதுக்கி கலை முயற்சிகளில் ஈடுபடுவதற்கு பல கலைஞர்கள் முன்வந்துகொண்டிருப்பது நம்பிக்கை தரும் விடயமாகும்.

இக் கலைஞர்கள் தாம் உருவாக்கும் கலைப் படைப்புக்களை தமிழீழ மக்களின் விடுதலைப் போருக்கு பலம் சேர்க்கும் வண்ணம் உருவாக்கட்டும்.

புறச்சூழல் காரணமாக பெரும் எண்ணிக்கையில் கலைப் படைப்புக்களை உருவாக்க முடியாத நிலையில் உள்ள எமது கலைஞர்கள், தாம உருவாக்கும் படைப்புக்களில் மக்களின் விடுதலைப் போராட்டம் தவிர்ந்த ஏனைய விடயங்களில் ஏன் கவனம் செலுத்த வேண்டும்?

நான் இப்படிக் குறிப்பிடுவதன் நோக்கம் 'இதனைத் தான் படை' என கலைஞர்களுக்கு வரையறை போடுவதற்கல்ல. மாறாக வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களைக் கொண்ட நமது கலைஞர்களிடமிருந்து மக்களின் பிரச்சனைகள் கலையாக வெளிப்படட்டும் என்ற ஆதங்கத்தினால் தான்.

புலம் பெயர்ந்த நமது கலைஞர்கள் இதனை கவனத்தில் கொள்வார்களா?

# திரைமறைவு நாடகம்

யாழ்ப்பாணம் செயலகத்துக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. ஜனவரி மாதச் செலவினங்களுக்குத் தேவையான 5 கோடியே 20 லட்சம் ரூபாவில் 2 கோடியே 70 லட்சம் ரூபாவுக்கு மட்டுமே கட்டு நிதி கிடைத்திருக்கின்றது.

திறை சேரியில் நிதி நெருக்கடி நிலவுவதால் யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய கட்டுநிதியை ஒழுங்காக அனுப்பமுடியாதிருப்பதாக, கொழும்பில் தலைமை அமைச்சு அறிவித்திருக்கின்றது. அரசாங்கத்துக்கு நிதி நெருக்கடி உண்டென்பது உண்மைதான். யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டியிருப்பதால், அதற்கெனப் பெரும்பான நிதி தேவைப்படுகின்றது. யுத்தத்தில் வென்று விடவேண்டும் என்ற ஆசையுடனும், ஆர்வத்துடனும் நவீன ஆயுதங்கள் வாங்கப்படுகின்றன. ஆளனியினர் அதிக எண்ணிக்கையில் திரட்டப்படுகின்றனர்.

ஆதலால் மொத்தச் செலவினத்தில் போருக்கு ஒதுக்கப்பட்ட 25 சத வீதமும் போதாமற் போகும் என்பதிற் சந்தேகமில்லை. மேலதிக செலவை ஈடுசெய்வதற்கு, மக்கள் சேவைத்துறைக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்குமென ஒதுக்கப்பட்ட நிதியை மாற்றுவதைத்தவிர அரசுக்கு வேறு மார்க்கம் இருக்காது என்பதும் வெளிச்சமானதே.

வேறு செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை யுத்தச்செலவுக்கு மாற்றும்போது சம்பந்தப்பட்ட துறைகள் பாதிப்புறும் என்பதில் சந்தேகமில்லை.ஆனால் அந்தப் பாதிப்புக்கள் தென்னிலங்கை மக்கள் மீது சுமத்தப்பட்டால் அரசின் செல்வாக்கு குறைவதோடு, பெரும் நெருக்கடிகளுக்கும் வழி செய்யும்.

அதனை அறிந்தே அரச அதிகாரிகள் யுத்தச் செலவின அதிகரிப்பால் உண்டாகும் சுமையை, பளுவை, பாதிப்பை தமிழர் தலைமீது சுமத்துகிறார்கள். அதன் பிரதிபலிப்பே யாழ்ப்பாண செயலகத்துக்கு போதிய கட்டுநிதியை அனுப்பாமல் நிதி நெருக்கடியைக் காரணங்காட்டுவது ஆகும்.

இந்தத் தில்லு முல்லுகள் உலக வங்கிக்கோ, சர்வ தேச நாணய சபைக்கோ, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கோ, இலங்கைக்கு உதவும் நாடுகள் குழுவுக்கோ தெரியாமல் இருக்க நியாயம் இல்லை. எனினும் பாரிசில் கூடிய இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு, கொழும்பு அரசு கேட்டதைவிட இரண்டரைக் கோடி டொலர்களைக் கூடுதலாக வழங்கியிருக்கிறது. மனித உரிமை மீறல் இராணுவச் செலவைக் குறைக்கவேண்டும் என்ற சொற்றொடர்களெல்லாம் வெறும் புருடாக்களே.

அமெரிக்காவின் செல்வாக்கு மேலோங்கி நிற்கும் உலக வங்கி, சர்வ தேச நாணய சபை ஆகியன காலால் இடும் கட்டளைகளை சிரசால் செய்துவருகின்றது சிறிலங்கா!

ஏனைய நாடுகளும் அவ்வாறே தமது பொறிக்குள் விழவேண்டுமானால், என்ன குறை, தவறு இருந்தாலும் அவற்றை மூடி மறைத்து சிறி லங்காவுக்கு அதிக நிதி உதவி வழங்க வேண்டுமென்று உலக வங்கி உள்ளூரத் திட்டமிட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வகையிலேயே இலங்கையின் பொருளாதாரம் வளர்ந்திருப்பதாக உருப்பெருக்கி அதன் பொருளாதாரக் கொள்கைகளைப் பாராட்டி, சிறிலங்காவுக்கு வக்காலத்து வாங்கி அறிக்கை வெளியிட்டு விடயத்தை வென்றிருக்கிறது. இதுவே உள்ளார்ந்த உண்மை! உலக வங்கி நடத்தும் திரை மறைவு நாடகம்!!

# 50 கலிபர் துப்பாக்கி உட்பட 20 நவீன ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவில் புலிகள் நடத்திய அதிவேக அதிரடித் தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விபரம் வருமாறு:

* 50 கலிபர் துப்பாக்கி - 1
* அதற்குரிய ரவைகள் - 1000
* ஆர்.பி.ஜி - 1
* அதற்குரிய செல்கள் - 4
* மினி மினி எல். எம். ஜி - 1
* அதற்குரிய ரவைகள் - 3000
* ரீ 56 ரகத் துப்பாக்கி - 18
* அதற்குரிய மகஸீன்கள் - 32
* அதற்குரிய ரவைகள் - 3000
* எவ். என். சி ரகத் துப்பாக்கி - 1
* அதற்குரிய மகஸீன் - 1
* துப்பாக்கி செல்கள் - 3
* ஏ.கே.எல். எம்.ஜி மகஸின் - 2
* அதற்குரிய தொடர் ரவைகள் - 128
* வெளிச்சக் குண்டு - 1

இவற்றுடன் தொலைத் தொடர்பு சாதனம், தொலை நோக்கி, இரவுப் பார்வைச் சாதனம், தொலை பேசி என்பனவும் இராணுவக் காவலரண் பகுதியிலிருந்து கைப்பற்றப் பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழ்த் தேசியவாதமும்

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் போர்த்துக்கேயரினால் யாழ்ப்பாண அரசு தோற்கடிக்கப்பட்டது. தொடர்ந்து சில ஆங்கிலேயர் வன்னியில் பண்டாரவன்னியனைத் தோற்கடித்து, வன்னிப்பகுதியில் தம் ஆதிக்கத்தினை உறுதிப்படுத்திக் கொண்டனர். இவ்வாறுதான் இத் தீவில் எமது அரசை - அதாவது தமிழ் அரசை அந்நியரிடம் நாம் இழந்தோம். பின் இந்த நூற்றாண்டின் மத்திய பகுதிகளில் ஆங்கிலேயர் தீவை விட்டு வெளியேறும் பொழுது தமிழர்களின் அரசை சிங்களவர்களிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றனர். அன்றைய தமிழர்தலைமைகள் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டனர். சுருக்கமாய் கூறுவதெனில் எம்மை ஆளும் உரிமை சிங்களப் பேரினவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

நீண்ட மூன்று நூற்றாண்டுகளாய் தமக்கென ஒரு அரசு இன்றி தமிழ் இனம் இத்தீவில் வாழ்ந்து பழகி விட்டது. உலகிலேயே தமிழருக்கென ஒரு அரசு கிடையாது. அரசின்றி வாழ்ந்த நிலையினால் எமது இனம், எமது மொழி, எமது மதம், எமது தேசம் பற்றிய சிந்தனைகள் தமிழரிடம் அற்றுப் போய்விட்டன. மறுபுறம் சுய நலப் போக்குகள் மிகத் தீவிரமாய் தமிழரிடம் வளர்ந்தன. தேசமும், இனமும் அழிக்கப்படும் போதும் தான் மட்டும் தப்பிக்கொள்ளும் வழியை தமிழன் தேட முற்பட்டான்.

இந்நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆங்கிலேயர் இத் தீவில் பாடசாலைகளை நிறுவி, ஆங்கில கல்வியையும் கிறிஸ்தவ மதத்தையும் போதித்த பொழுது தமிழர்கள் எவ்விதத் தயக்கமுமின்றி இவற்றை ஏற்றுக் கொண்டு ஆங்கிலேயருக்கு விசுவாசமான ஊழியர்களாய் செயற்பட்டனர்.

ஆனால் தீவில் சிங்கள மக்கள் மத்தியில் இந்நிலை காணப்படவில்லை. சிங்கள மொழி, பௌத்த மதம் இவற்றை முடிந்தவரை பேணிக்காத்துக் கொண்டனர். சிங்களவர் மத்தியில் அநாகரிக தர்மபால, பௌத்த பிக்குகள் ஆகியோர் சிங்களவரிடம் இன உணர்வை மொழி, மத உணர்வுகளை கட்டி வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க பணியாற்றினர். இவ்வகையில் அவர்களின் பணி முற்போக்கானதெனினும் இவர்கள் இனவாதிகளாய் இருந்தமை வருந்தத்தக்கதே.

இன்றைய சிங்கள ஆட்சியாளர் முதல் அன்றைய பௌத்த சிங்கள அரசர்கள் வரை இனவாதிகளாகவே இருந்து வந்துள்ளனர் என்பதை இங்கு குறிப்பிடுதல் சிறப்பானதே. இன்று இலங்கையின் வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சத்தை எழுதிய மகாநாயக்க தேரர் கூட வரலாற்றைச் சரியான கண்ணோட்டத்தில் பார்க்காது இனவாத அடிப்படையில் வரலாற்றைத் திரித்தார்.

தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்டிருந்த பரணவிதான என்பவர் அண்மைக் காலத்தில் புகழ் பெற்ற வரலாற்று திரிபுவாதியாய் விளங்கினார். இவர்கள் யாவரும் திட்டமிடப்பட்ட முறையில் தீவில் தமிழரின் உண்மை வரலாற்றை இருட்டடிப்புச் செய்தார்கள். முடியாதவிடத்து திரிபு படுத்தினார்கள். சிங்கள ஆசிரியர்கள் இனவாத நோக்குடனேயே மாணவர்கட்கு வரலாற்றைப் போதித்தார்கள். தமிழரை ஆக்கிரமிப்பாளர்கள் என்றே இனம் காட்டினர்.

இத் தீவில் சிங்கள மக்களின் வருகைக்கு முன்னரே வளர்ந்திருந்த ஆதித்திராவிட கலாச்சாரத்தை முழுமையாய் இருட்டடிப்புச் செய்தனர். சிங்கள ஆட்சியாளர்கள், மதபீடம், வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பெரியார்கள் அனைவரும் ஒன்றுபட்டு நின்று இனவாதத்தை சிங்கள மக்களிடம் தூண்டிவிட்டனர். ஆனால் தமிழ்ப் புத்திஜீவிகள், ஆசான்கள் மற்றும் பிரமுகர்கள் தமிழ் மக்களிடம் தேசியவாதத்தைக் கட்டி வளர்ப்பதில் எதுவித அக்கறையும் காட்டவில்லை. மாறாக திரிபு படுத்தப்பட்ட இனவாத அடிப்படையில் அமைந்த வரலாற்றுப் பாட நூல்களை எவ்வித தயக்கமுமின்றிப் போதித்தனர்.

விளைவு இன, மத, மொழி, தேசம் பற்றிய உணர்வுகள் தமிழர்களிடம் அற்றுப்போய் பட்டம், பதவிகள் மட்டுமே ?

இலட்சியம் என்ற நிலையில் தமிழ் இளைஞர்கள் வளரத் தலைப்பட்டனர். கல்வி ஒரு முதலீடாகியது. உயர் கல்வியைப் பெற்று பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று, பெற்ற பட்டத்தை விற்றுப் பிழைக்கும் கூட்டமாக தமிழ்ச் சமூகம் காணப்பட்டது. இத்தன்மை மிகத் தெளிவாய் நடுத்தர வர்க்கத்தினரிடம் காணக்கூடியதாயுள்ளது.

உயர்கல்வியில் எங்கேனும் தடங்கல்கள் ஏற்பட்டதும், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்து வாழ முற்பட்டனர் மேற்படி நடுத்தர வர்க்க இளைஞர்கள். மறுபுறம் உழைக்கும் வர்க்க இளைஞர்கள் மிகப் பெருவாரியாய் போராட்டத்தினுள் உள்வாங்கப்பட்டனர். இழப்பதற்கு எதுவுமற்றவர்களே போராட்டத்தில் முற்போக்கான பாத்திரத்தை வகிப்பதனை இங்கு வெளிப்படையாய் காண முடிகின்றது. இன உணர்வற்றுத் தமிழினம் தான் மட்டும் தப்பிக்கொள்ளும் வகையில் வாழ்வது மிகக் கேவலமானது மட்டுமல்ல. இது மிக ஆபத்தான ஒரு வளர்ச்சியாகும். தமிழ் கல்விமான்கள் இத்தகைய வெட்கப்படவேண்டிய நிலைக்கான பொறுப்பில் பெரும் பங்கினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அண்மையில் யாழ் மாவட்ட பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் பொழுது விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவர் திரு.மாத்தயா அவர்கள் பின்வருமாறு கூறினார்.

' சிங்களவர்களிடையே உள்ள, இன உணர்வு தமிழர்களிடையே இன்று இல்லை. யாரோ போராட்டம் நடத்துகின்றான்.எமக்கென்ன என்ற நிலையில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த வெட்கக்கேடான நிலை மாற வேண்டும். ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் முதல் சகல அரச ஊழிர்களும் தமது வேலை பறி போய்விடும், இடமாற்றம் வரும், பதவி உயர்வு நிறுத்தப்பட்டுவிடும் என்ற நிலையில் போராட்டத்துக்கு தமது பங்களிப்பை வழங்கப் பின்நிற்கின்றார்கள்".

மேலும் அனைத்துத் தமிழரும் இனஒழிப்பிற்கெதிராக குரல் கொடுத்தேயாக வேண்டும். - தமிழினம் உரிமையுடன் வாழ அதிபர்கள், ஆசிரியர்களின் பங்கும் அவசியமானதென்றும் அவர் சுட்டிக் காட்டினார்.நீண்ட பதினெட்டு ஆண்டுகள் சிறிலங்கா, இந்திய அரசுகளுக்கெதிராக தொடர்ச்சியாய் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிரதித் தலைவரின் கூற்றுக்களை நாம் ஆழமாக ஆய்வு செய்தோமானால் மிகுந்த மன வேதனையுடனேயே அவர் தமிழ் சமூகத்தைப் பார்க்கின்றார் என்பது தெளிவாகும். உண்மையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு நாம் அனைவரும் எமது பங்களிப்பைச் செலுத்தியே ஆகவேண்டும். தமிழனாய் பிறந்த ஒவ்வொருவரினதும் தவிர்க்க முடியாத வரலாற்றுக் கடமையே இது. அத்துடன் தமிழ் இன உணர்வு சிறார்களில் இருந்து படிப்படியாய் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்களும், புத்தி ஜீவிகளும் இப் பணியை மிகத் திறம்படச் செய்து முடிக்க வேண்டும். எமக்கென சொந்த அரசு இல்லாத நிலையில் பட்டம், பதவிகளினால் எந்தவித பயனுமில்லை என்ற உண்மை சமூகத்திற்கு உணர்த்தப்பட வேண்டும். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் இத் தீவில் நாம் இழந்த அரசை மீட்டெடுக்கும் புனிதப் போரில் நாம் அனைவரும் இணைந்து கொள்வோம்.

' அடக்கு முறைக்கெதிராக ஆயுதமேந்தக் கற்றுக்கொள்ளாத எந்தவொரு தேசிய இனமும் அடிமை வாழ்விற்கே தகுதியானது".



இது

## எங்கள் வாழ்வு

சின்னண்ணன் திரும்பி வரவில்லை. இந்தத் தேசத்தின் விரோதிகள், இந்த நாட்டின் பற்றாளன் ஒருவனை இந்த நாட்டை நேசித்ததற்காகவே பிடித்துச் சென்றனர்.

இரண்டு நாட்களின் பின்பு....., அவன் ஆற்றில் மிதந்தான்.

ஆற்றங்கரை எங்கும் ஊரவர்கள் நின்றார்கள். அமுதனும் நின்றான். கரையில் நின்ற காட்டுமரம் ஒன்றின் வேரில் சிக்குப்பட்டு சின்னண்ணனின் உடல் கிடந்தது. ஊரவர்கள் வெளியில் எடுத்தனர்.

உடல் எல்லாம் கொடூரமான காயங்களோடு...., அண்ணன்... அந்த மிருகங்கள் அவனை சித்திரவதைச் செய்து கொன்றிருந்தார்கள்.

* *

சின்னவயதிலேயே சந்தித்துவிட்ட துயரங்களால் தங்கச்சி கலங்கிப் போனாள். அவள் விழிகளில் நிரந்தரமாகவே சோகமும் - மருட்சியும் படிந்து போனது. வீட்டிற்குள் பகலிலும்- இரவிலும் படுத்திருப்பாள். தூக்கம் வராது. மனம் வெப்பத்தில் தகிக்கும், தவிப்பாள். வெளியே வருவாள். விழிகளால் அமுதனைத் தேடுவாள். அவளுக்கு ஏதோ தன் கடைசி அண்ணனைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிருக்கும்.

அமுதனில்தான் எத்தனை மாறுதல்கள். அவனது விளையாட்டுப் புத்தி எங்கேயோ ஓடிப்போனது. தோற்றம் கூட பதினெட்டு வயதிற்கு உரியதல்ல. பார்ப்பவர்கள் அதனை விட அதிகமாகத்தான் நினைப்பார்கள். இப்போதெல்லாம் தங்கச்சிக்கு அப்பாவும் அம்மாவும் அண்ணனும் அவன்தான், வயலுக்குப் போவான். சேற்றிற்குள் நின்று கடுமையாக உழைப்பான். வேலை முடிந்ததும் அந்த ஊரவரின் வழமைபோல அவன் ஆற்றங்கரைக்குப் போகமாட்டான்.

சில நேரங்களில் வயல் வரம்புகளில் ஏறிநிற்பான். ஆற்றில் தவழ்ந்து - நெற் கதிர்களை தடவி வரும் தென்றலில் தொடுகை அவனிற்குள் வெறுப்பை வளர்க்கும். பன்னிரண்டு வயதில் அவன் அம்மாவை ஆறு இழுத்துக் கொண்டு போனது தொடக்கம் அந்த ஆற்றில் மிதந்த அவனது உறவுகளின் நினைவுகள் நெஞ்சத்தை அழுத்தும். தன் கோபம் முழுவதையும் தீர்த்து விடுமாற் போல் காற்றில் கைகளை வீசுவான். மனதிற்கு ஆறுதல் வராது. வீட்டைப்பார்க்க வேகமாக நடப்பான். தங்கச்சியைக் காணும் வரை - காணும் எல்லாமே அவனுக்கு வெறுப்பாகவே இருக்கும்.

அவனைப் போலத்தான் முன்னம் போடிவெட்டையும் அமைதியை இழந்து - ஆபத்தை எதிர்பார்த்தபடி தினமும் இருந்தது. எல்லோரும் எதிர்பார்த்தபடியே ஒரு விடிகாலை நேரம் கிராமத்தின் நடுவே வெடிச்சத்தங்கள் எழுந்தன.

" ஆமிக்காரரும் - சிங்களக் காடையரும் வாறாங்கள் "

எல்லோரும் ஓடினார்கள், கிராமத்திற்குள்இருந்து அவலமான குரல்கள் எழுந்து காற்றில் கலந்தது.

அமுதன் தங்கையையும் இழுத்துக் கொண்டு ஓடினான்,

ஆறு வழி மறித்தது....வெடிச்சத்தங்கள் நெருங்கின. அவர்கள் ஆற்றில் இறங்கினர். ஆறு ஆழமில்லாமல் இருந்தது. கோபமில்லாமல் அமைதியாக ஓடியது.

"சீ..இந்த ஆறு அண்டைக்கும் இப்பிடியே ஓடியிருந்தா அம்மா தப்பி இருப்பாள்" அந்த நினைவு நெஞ்சத்தைப் பாரமாக அழுத்தியது. ஆற்றின் கரைகளில் நின்ற மரங்களில் குரங்குகள் ஆர்ப்பரித்தன. கிராமத்திலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் இடைஇடையே கேட்டு அடங்கின.

"எத்தனை நாளைக்கு இப்பிடியே ஓடப்போறோம்" தங்கையின் கேள்வியைக் கேட்டு அமுதன் திகைத்துப் போனான். அந்தப் பிஞ்சு நெஞ்சில் தோன்றிய சிந்தனை அவனில் பெரிதாக வளர்ந்தது.

' நாங்கள் அடிமைகள், எங்களை யாரும் எப்பவும் - எதற்கு வேண்டும் என்றாலும் கொல்லலாம். எங்கள் உயிரற்ற உடல்களை வழமை போல இந்த ஆறு சுமந்து செல்லும்' நினைவுகளால் எழுந்த வெறுப்பு நெஞ்சம் எங்கும் பற்றிப் படர்ந்தது.

ஆறு சல சலத்துப் பாய்ந்து கொண்டிருந்தது. அமுதன் கிராமத்தைத் திரும்பிப் பார்த்தான். கிராமம் எங்கும் எழுந்த கரிய புகை வானில் கலக்க எழுந்தது. அவனது நெஞ்சம் அழுதது. " இந்தக் கிராமத்தில் நாங்கள் பயமற்ற மனிதர்களாக ஒரு நாளைக்கு வாழ வேணும்" அவன் உறுதியாக நிமிர்ந்தான்.

* *

"அமுதண்ணைக்கு நினைவு வந்திட்டுது" அந்த வைத்தியசாலை எங்கும் அதிரும் வண்ணம் சின்னவன் ஒருவன் கத்தினான்.

அமுதன் கண்விழித்தான். அவனுக்கு முன்னால் அவனையே பார்த்தபடி அந்தச் சின்னவன் நின்றான். பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும்..உருண்டை முகம் - தலைமயிரை ஒட்டவெட்டி இருந்தான் விழிகளில் துரு துருப்பும் ஆர்வமும் படிந்து போய்க் கிடந்தது.

" இவர்கள் த்ரான் பராமரிப்பாளர்கள்"

அமுதனுக்கு விளங்கியது. அவன் நிமிர முயன்றாள்- சின்னவன் ஓடிப்போய் உதவி செய்தான்.

" என்ர தங்கச்சியும் இப்படித்தான் வளர்வாள். இந்த நாட்டை நேசிப்பவளாக, இந்த நாட்டின் விடுதலைக்காக சின்னவயசிலேயே உழைப்பவளாக...." அவனின் இதயத்திலிருந்து வலி நீங்கி சுகமான உணர்வொன்று படர்ந்தது. திறந்திருந்த பலகணிக்கால் காற்று முகத்திலடித்தது - வெறுமையாக இருந்த உடல் எங்கும் பட்டுத் தடவிச் சென்றது.

திரும்பிப் பார்த்தான் - அவனுடன் போர்க்களத்தில் நின்ற பலர் அங்கு கட்டிலில் கிடந்தனர். தெரிந்தவர்கள் தங்கள் சோர்ந்த- வெளிறிப்போன முகத்தைச் சாதுவாக அசைத்துச் சிரித்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கு முன்பும் ஒரு சிறுவன் உற்சாகமாக உலகத்தை வென்றுவிடும் ஆர்வத்துடன் சுறுசுறுப்பாக நின்றான்.

" இந்தச் சண்டையில் நாங்கள் சிலரை இழந்தும் இருப்போம்" இனந்தெரியாத சோகம் ஒன்று நெஞ்சத்தில் தவழ்ந்தது. வெளியே பார்த்தான். சிறுவர்களில் மூவர் எதையோ கத்திக் கதைத்து சண்டைபிடித்துக்கொண்டு மகிழ்ச்சியோடு சென்றார்கள்.

" இந்த மண்ணில் சிந்தப்படும் இரத்தம் ஒருநாள்- இந்த மண்ணை விடுவிக்கும்." அமுதனின் முகத்தில் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் படர்ந்தது.

அந்தச் சிறுவன் இன்னமும் அருகிலேயே நின்றான். அவனது ஆர்வம் நிறைந்த உருண்டை விழிகளால் பார்த்தபடி.......,

உண்மைச் சம்பவம்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வதேசக் களம்

## பஞ்சாப் வெற்றி ஆளும் கட்சிக்கு திடீர் அதிஷ்டம்.

28 % மானவர்கள் வாக்களித்து நடந்த பஞ்சாப் தேர்தல் மூலம் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு 13 ஸ்தானம் மேலும் கிடைத்துள்ளது. இது பெரும்பான்மைப் பலம் இன்றித் தவித்த ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு ஓர் வரப்பிரசாதமாகும். பொருளாதாரப் பிரச்சனையில் தத்தளிக்கும் இந்தியா இனிமேல் தான் நினைக்கும் எந்த மசோதாவையும், எதிர்கட்சிகள் ஆதரவின்றி சபைக்குள் நிறைவேற்ற முடியும். இதுவரை சோவியத் யூனியன் உதவியுடன் வாழ்ந்த இந்தியா அந்நாடு உடைந்த பின் மேற்கு நாடுகள் வழியில் போக வேண்டிய நிர்ப்பந்தத்தைப் பாராளுமன்றத்தில் சிக்கல் இன்றி நிறைவேற்ற முடியும். தனியார் மயப்படுத்தல், திறந்த பொருளாதாரம் அயல்நாட்டு உறவுகளில் மாற்றங்கள் போன்றவற்றைக் கொண்டு வர எதிர்கட்சிகள், குறிப்பாக இடது சாரிகள் தடையாக இருந்தமை இனி ஒழிக்கப்படும் என அவதானிகள் கூறுகின்றனர். ஆனால் காங்கிரஸ் கட்சிக்குள் இருக்கும் உட்கட்சிப் பிரச்சனை, நாட்டில் ஏற்பட்டுள்ள மதவெறி, விலைவாசி உயர்வு போன்றவை, 'திறமைசாலி' பிரதமர் எனப் புகழ் பெற்ற நரசிம்மராவுக்கு பெரிய சவாலாக இருக்கப் போகின்றன.

## கம்போடியாவும் நிலக்கண்ண்ணிவெடிப் பிரச்சனையும்.

- சாரதாதேவி -

ஐ.நா சமாதானப் படைக்கு இது ஒரு பெரிய தலைவலியாகும். ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் அல்லது உலகப் போரில் விதைக்கப்பட்ட கண்ணிவெடிகளுள் பல இன்றும் கண்டு பிடிக்கப்படாமல் உள்ளன. பல பிரிவுகளைக் கொண்ட போராட்டக்குழுக்கள் ஒருவரை ஒருவர் அழிக்கும் நோக்கில் ஏராளமான வெடிகளைப் புதைத்துள்ளன. புதைத்தவர்கள் பலர் இன்று உயிருடன் இல்லை, அவசரத்தில் புதைத்தவர்களுக்கு இடங்கள் பல ஞாபகமும் இல்லை. போர்சீர் கேடுகளைத் திருத்த நிதிக்கு அல்லல்படும் இவ்வேளையில் ஐ.நா. பணமும், நிபுணர்களும் அகற்றும் பணியில் ஈடுபடுதல் ஒரு விரயமாகக் கருதப்படுகிறது.

இதனால் உள்நாட்டு வாசிகளுக்கு நிலக்கண்ணி வெடி செயல்

இழக்கச் செய்யும் பயிற்சிகளை அளித்து சிரமதானம் மூலம் இப்பணியை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது பல வருடங்கள் எடுக்கும் எனக் கூறப்படுகிறது. போகிற போக்கைப் பார்த்தால் கால ஓட்டத்தில் கண்ணிவெடி செயல் இழப்புத் துறையில் கம்போடியர்கள் சிறப்புத் தேர்ச்சியடைந்து விடுவர் போலிருக்கிறது.

## மக்கள் சீனக்குடியரசின் ஆசியுடன் படுகொலை முயற்சியில் பர்மா

பர்மாவின் துருப்புக்கள் எண்ணிக்கை 300,000 ஆக்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்கட்கு முன்பு இத்தொகை பாதியாகவே இருந்தது. கரேன் புரட்சியாளர்கள், சிறுபான்மை முஸ்லீம்கள் தான் இவ் இராணுவத்துக்குத் தீனிகள். பொதுவுடமைமைத் தத்துவத்திற்குத்

தான் தான் இன்று தலைமை என வாதிடும் சீனா மக்களை அழித்து ஒழிக்கும் நாடுகளுக்கு இராணுவ தளபாட உதவி வழங்குவதில் முன்னிலை வகித்து வருகிறது. சீனாவின் உதவி கிடைத்தும் முதல் வேலையாக தாய்லாந்து எல்லைக்குள் புகுந்து கரேன் புரட்சியாளர்கள் நிலைகளைத் தாக்கியது. உள்நாட்டு முஸ்லீம்களைத் தாக்கியதோடு நிற்காது பங்களா தேசத்துக்குள் புகுந்து புரட்சியாளர்களைத் தாக்கியது. இப்போக்கினை அவதானித்தால் தெற்காசிய நாடுகளின் எல்லைகளை அங்கீகரிக்காது விடும் சதியில் பர்மாவை கைக்கூலிச் சண்டியனாகச் சீனா தத்தெடுத்துள்ளதாகப் பேசப்படுகிறது. தரைமார்க்கமான துருப்புக்களுக்குத் தேவைப்படும் உபகரணங்கள், குண்டு வீச்சு விமானங்கள் பர்மாவுக்கு கொடுக்கும் வேளை அவ்வளவு சந்தேகம் தோன்றவில்லை.அண்மைக் காலத்தில் H N 4 ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகளை இது சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்டதன் மூலம் ஏதோஒரு அயல்நாட்டுடன் சண்டைக்கு பர்மா தயாராகிறது என எண்ணத் தோன்றுகிறது.

## அமெரிக்க இந்திய உறவு

### இந்து சமுத்திர அமைதிக்கு ஆப்பு


இந்து மகா சமுத்திரத்தில் இந்திய-அமெரிக்கக் கடற்படைக்கப்பல்கள் கூட்டுக் கடற்படை பயிற்சி ஒத்திகைகளை நடத்தவிருக்கின்றன. இது பற்றி இரு நாடுகளும் ஆராய்ந்து வருகின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

ஜனவரி 24 ஆம் திகதி இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே.-என்.டிக்ஸிற் புதுடில்லியில் வைத்து அமெரிக்கக் கடற்படை செயற்பாடுப் பணிப்பாளர் அட்மிரல் பிராங்க் கெல் ஸோ,பசுபிக் பிராந்திய அமெரிக்க இராணுவத்தின் கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜொனி எச். கோன்ஸ் ஆகியோருடன் உயர் நிலைப் பேச்சுக்களை நடத்தினார்.

அப்பேச்சுக்களின் போது இந்த விடயம் பற்றி ஆராயப்பட்டதாக தொவிக்கப்படுகிறது.இந்திய ஆயுத படைகளுக்கு உதவிகளைப் பெறுவது பற்றியும் அங்கு பரிசீலனை செய்யப்பட்டது. இந்தியாவின் இந்த புதிய நிலைப்பாடு காரணமாக இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாக்க வேண்டும் என்று இந்தியாவின் ஆதரவுடன் இலங்கை முன்னர் சமர்ப்பித்த யோசனைக்கு என்ன கதி ஏற்படும் என்ற கேள்வி இராஜதந்திர வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளது.

"இந்து மகா சமுத்திரத்தில் உள்ள தியாகோ கார்ஸியோ தீவில் உள்ள அமெரிக்க படைகள் வெளியேற வேண்டும்; இந்து சமுத்திரத்தில் வல்லரசுகளின் பிரசன்னம் இருக்கக் கூடாது" என்று முன்னர் இந்தியா கொண்டிருந்த நிலைப்பாடு என்னவாயிற்று என்றும் இராஜதந்திர வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

# எரியும் 600 எண்ணெய் கிணறுகளுடன் குவைத்



பாரசீக வளைகுடாப் போர் ஓய்ந்துவிட்டது. ஆனால் அங்கு மழை விட்டும் தூவானம் ஓய்ந்தபாடில்லை. ஈராக்கில் உள்நாட்டுக் கலகம் வெடித்துள்ளது. ஈராக் - ஈரானுக்கிடையில் கெடுபிடி யுத்தம் (Cold war) நடைபெறுகிறது. அமெரிக்கா தனது ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்து வருகிறது.

குவைத்திலிட்ட தீ இன்னும் அணையவில்லை. 60 லட்சம் பீப்பா எண்ணெய் குவைத்தில் எண்ணெய்க் கிணறுகளிலும், எண்ணெய் வயல்களிலும் எரிந்துகொண்டிருக்கின்றன. பல லட்சம் கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான இந்த எண்ணெய் எரிந்து நாசமாவதைத் தடுக்கப் பலர் போராடியவண்ணம் உள்ளனர். தீயை அணைக்கச் சுமார் ஒருவருடம் வரை செல்லக்கூடும் என்று துறைசார்ந்த நிபுணர்கள் கருதுகின்றனர். எரிகிற வீட்டில் கொள்ளி எடுப்பதுபோல் சிறிலங்கா தொழில் அமைச்சு அங்கு வேலைவாய்ப்புகளைத் தேடுகிறது. எண்ணெய் உற்பத்தி நிறுத்தப்பட்டதால் நாள் ஒன்றிற்கு குவைத்திற்குப் பத்துக்கோடி அமெரிக்க டாலர் நஸ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

## தீ ய ணை க் கு ம் ப ணி

குவைத்தில் எண்ணெய்க்கிணறுகளுக்கு ஏற்பட்டிருக்கும் பாரிய சேதத்தை நிவர்த்தி செய்வதற்கான முதலாவது அறிகுறிகள் தென்படுகின்றன. தீயணைக்கும் படையினர் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்திக் கொண்டுடிருக்கிறார் கள். எனினும் குவைத்தில் போதிய அளவு நீரில்லாமை இவர்கள்- பணிக்குப் பெரும் தடையாகவுள்ளது.

இந்தத் தீயை முற்றாக அணைக்கும் பணியை அமெரிக்க பல்டேகா நிறுவனம் பொறுப்பேற்றுள்ளது. இந்த நிறுவனம் அனைத்து உலகிலும் தீ அணைக்கும் வேலையில் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலான அனுபவம் உடையது. இந்த நிறுவனம் பாரசீக வளைகுடா எண்ணெய்க் கிணறுகள் தொடக்கம் லிபியா வரை ஏற்பட்டுள்ள தீயை அணைத்து அனுபவம் பெற்றதாகும். லிபியாவில் 1965 இல் ஆறு கிணறுகளில் பற்றிக்கொண்ட தீ இந்த நிறுவனத்தினால் ஒரே சமயத்தில் அணைக்கப்பட்டது. தேவைக்கேற்றவாறு அமைக்கப்பட்ட உபகரணங்கள், அதுவும் பயன் பொருத்தமான உபகரணத் தொகுதிகள் போதிய அளவில் கிடைக்காமை தீ அணைப்பதில் ஏற்பட்டுள்ள ஒரு முக்கியதடையாகும்.

தீ அணைக்கும் நிறுவனம் குவைத்தில் மூண்டெழும்தீயை அணைக்க மாற்றுவழிகளைக் கையாள முடியும். வெடிமருந்துகளை உபயோகித்தல், காற்றில் சுவாலையை அகற்றுதல், சுவாலைக்குக் கிடைக்கும் ஓட்சிசனைத் தடுத்தல் ஆகிய மூன்று வளிகளை வெற்றிகரமாகக் கையாளலாம். மற்றும் படி வேற கிணறுகளைத் தோண்டி எண்ணெயை அவற்றினுள் வடியவிடலாம்,அல்லது பெருமளவு நீரை ஊற்றி சுவாலையை அமுக்கி அணைத்தும்விடலாம். இதற்கான நீரை நீண்ட குழாய்கள் மூலம் ஆழமான கிணறுகளிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

குவைத்தில் ஒரே சமயத்தில் 600 க்கும் மேற்பட்ட எண்ணெய்க் கிணறுகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பது பலடேகா நிறுவனம் முகம் கொடுக்க வேண்டிய மிகப் பெரிய சவாலாகும். எது எப்படியாயினும், தீயணைக்கும் பணியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கு சுமார் ஒரு வருட காலம் பிடிக்கக் கூடும்.

## சர்வதேசப் பேரிழப்பு வலயம்

பாரசீக வளைகுடாப் பகுதியைச் சர்வதேசப் பேரிழப்பு வலயம் (International Disaster Area)என்று பிரகடனப் படுத்தினால் என்ன ? வளைகுடாப்போர் அப்பகுதியில் வாழும் எல்லா உயிரினங்களுக்கும் கேடுவிளைவித்துள்ளது. இப் பகுதியில் போரின் விளைவுகள் தொண்டைநோய், சுவாசப்பை நோய், புற்றுநோய், இருதய நோய் போன்ற ஆபத்தான நோய்களையும் கொண்டுவரும். இப் பகுதிகளில் சூழலின் சமநிலையும் குழம்பியுள்ளது.

* ஈராக் ஏற்படுத்திய எண்ணெய்க் கசிவு கடலுடன் கலந்ததனால் வளைகுடாக் கடலில் சில பகுதிகளில் ஓட்சிசன் குறைந்து காணப்படுகின்றது. இதனால் காலப்போக்கில் இப்பிரதேசத்திலுள்ள கடல்படு பிராணிகளுக்கு ஆபத்து உண்டாகும்.இப்பிரதேசத்திலுள்ள கடல்படு உணவுவையுட்கொள்ளும் மக்களும் பாதிக்கப்படலாம். 1972 இல் யப்பானில் மினிமோட்டா குடாவில் பிடிக்கப்பட்ட மீனை உண்டவர்களுக்கு மினிமோட்டா நோய் உண்டாகியதை உதாரணமாகக் காட்டலாம்.

* தரைச் சூழலும் மாறுபட்டுள்ளது. எண்ணெய்க் கசிவு இரசாயனப் படிவுகளினால் தரைச்சூழலின் சம நிலை பாதிப்படைந்துள்ளது. எண்ணெய்க்கசிவு மக்கள் வாழும் பகுதிகளுக்குப் பரவத் தொடங்கியுள்ளது. இதனால் வளை குடாப்பகுதியில் சங்கிலித் தொடர்போல் பயிர்களின் வளர்ச்சி அழிந்துவிடலாம். வளைகுடாவில் கிடைக்கும் உணவு வகைகளை உண்பதினால் உடல்நிலை பாதிப்படையும்.

* ஈராக் வைத்த தீயால் சில கிணறுகளில் தீப்பற்றவில்லை. எரியும் கிணறுகளிலிருந்து வெளிவரும் வெப்பத்தினால் எரியாத கிணறுகள் ஐதரசன் சல்பைட்டை வெளிப்படுத்துகின்றன. இந்த நச்சு வாயு வளிமண்டலத்துடன் கலக்கிறது. இத்துடன் பெற்றோலியம் எரியும்புகையும் வளிமண்டலத்துடன் கலந்து வழியை மாசுபடுத்துகின்றது. இதனால் தாவரங்களுக்குத் தீங்கு உண்டாகும். பின்னர் இது மனிதனையே பாதிக்கும். எதிர்காலத்தில் இப்பகுதிகளில் பிறக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாகப் பிறக்கலாம்.

* பெற்றோலியம் எரிவது அடர்ந்த புகைப்படலமாக இருப்பதால்,சூரியனின் ஒளி பூமியில் விழாது தடை செய்யப்படுகிறது. குவைத்தில் மழைமேகம் போல் மூட்டம் போட்டிருக்கும் புகைமூட்டத்தின் நிழலில் வெயிலுக்கு ஒதுங்குகிறார்கள் என்றால், புகைப்படலத்தை எண்ணிப்பா ருங்களேன்! புகையுடன் சேர்ந்தாற்போல் போர் விமானங்கள் ,ஏவுகணைகளிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்களும் சேர்ந்து வளிமண்டலத்தில் மேற்படலமாக அமைந்துள்ள ஓசோன் படலத்தைப் பாதிக்கின்றது. இது சூரியனின் கதிர்கள் பூமியில் விழாமல் தடை செய்கின்றது. ஓசோன் படலப் பாதிப்பினால் உயிரினங்களுக்கு ஆபத்து உண்டாகலாம்.

* 50 டெசிபலிக்குக் கூடிய ஒலி மனிதனுக்குக் கூடாது. பாரிய குண்டு வெடிப்புச் சத்தங்களினால் சூழல் மாசடைதல் ஒருபுறமிருக்க, இப்பகுதி மக்களுக்கும் கேடு விளைவித்திருக்கிறது. இந்த சத்தம் மனிதனுடைய நரம்புத் தொகுதியைப் பாதிக்கின்றது. மனிதனுடைய உளவளமும் பாதிப்படையக்கூடும். இத்தாக்கம் பின்னர் தான் உணரப்படும்.

வளைகுடாப் போரினால் குவைத்தின் எண்ணெய்க்கிணறுகள் எரியலாம். அதனால் அதன் பொருளாதாரம் கருவழியலாம். ஆனால் வளை குடா நாட்டு மக்களின் சுக வாழ்வு பாதுகாக்கப்படுமா? இது கேள்விக் குறியாகவே உள்ளது. எதிர்காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்களப் பேரினவாத அரசுடனான

# பகைமை முரண்பாட்டை தீர்ப்பதற்கான ஓரியல்பான வளர்ச்சியே இன்றைய போர் !

போர் வேறு அரசியல் வேறல்ல. அரிசி வேறு சோறு வேறாகுமா? வேக வைத்த அரசி தான் சோறு. இந்த விதத்தில் நோக்கினால் அரிசியும் சோறும் வேறல்ல தான். ஆனால் அரிசியை அப்படியே உண்ண முடியாது. சோறு உண்ணக் கூடிய நிலைக்கு மாற்றபட்ட அரிசியாகும். இந்த அர்த்தத்தில் பார்க்கப் போனால் அரிசியும் சோறும் வேறுவேறானவைதான். இவ்விதமாகத்தான் போரும் தன்மட்டில் தானே ஒரு அரசியல் தான். இராணுவ மோதல்களின் மூலம் இரத்தம் சிந்தப்படும் அரசியலே போராகும். இவ்விதம் இரத்தம் சிந்தாது நடைபெறும் போராட்டமே அரசியலாகும். அதேநேரத்தில் போர் என்னும் அரசியல், சாதாரண அரசியலில் இருந்து சோறு அரிசியில் இருந்து வேறுபடுமாப் போல் நிரம்பவும் வேறுபட்டது.

மனித சமூகம் பல்வேறு பொருளாதார காரணங்களால் வெவ்வேறு சமூக நலனுள்ள பல்வேறு குழுமங்களாக பிரிபட்டுள்ளது. ஆளும் இனம்-ஆளப்படும் இனம், மேலாதிக்கம் மிக்க மதம் - ஒடுக்கப்படும் மதம், ஒடுக்கும் சாதி-ஒடுக்கப்படும் சாதி, ஆண்மேலாதிக்க வாதிகள்-பெண்நிலைவாதிகள், சுரண்டும் வர்க்கம்-சுரண்டப்படும்.வர்க்கம் ஏகாதிபத்திய நாடுகள்- நவ-காலனிநாடுகள் முதலாளித்துவ நாடுகள்- சோசலிச நாடுகள் போன்ற குழுமங்கள் வெவ்வேறு நலன் கொண்ட சமூக குழுமங்களுக்கு சில உதாரணங்களாகும். வெவ்வேறு நலன்கள் இருப்பதால் அவற்றினிடையே முரண்பாடுகளும் இருக்கும் என்பது இயல்புதானே. இம் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக பிரிந்து நிற்கும் இவ்விரு பகுதிகளும் தமக்குள் ஓயாது போராடிக் கொண்டே இருப்பார்கள். ஆளும் இனமும் ஆளப்படும் இனமும் ஒன்றுடன் ஒன்று போராடுகின்றன. சுரண்டும் வர்க்கமும் சுரண்டப்படும் வர்க்கமும் ஒன்றுடன் ஒன்று போராடுகின்றன. இவ்விதமாக முரண்பட்ட இரு பகுதிகளும் தமக்குள் ஒன்றுடன் ஒன்று போராடிக் கொண்டே இருக்கின்றன. இடைவிடாத போராட்டம் இப் போராட்டங்களின் ஒட்டு மொத்தம் தான் மனித சமூக வரலாறாகும்.

இம் முரண்பாடுகளின் செயற்பாடுகள் பற்றிய தத்துவங்கள், கோட்பாடுகள், கொள்கைகள், தந்திரோபாயங்கள், கண்ணோட்டங்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்தத் தொகுப்பே அரசியல் எனப்படும். ஆகவே முரண்பட்டு நிற்கும் ஒவ்வொரு பிரிவும் தனக்குத் தனக்கென்று தனியான ஒரு அரசியலைக் கொண்டுள்ளது. ஒடுக்கும் இனத்தின் அரசியல்- ஒடுக்கப்படும் இனத்தின் அரசியல், சுரண்டும் வர்க்கத்தின் அரசியல் - சுரண்டப்படும் வர்க்கத்தின் அரசியல் - ஏகாதிபத்திய அரசியல் - நவ - காலனியல் நாடுகளின் அரசியல் என இவ்விதமான தனித் தனி அரசியல் உண்டு.

வெவ்வேறு சமூகப் பிரிவினரிடையே நிலவும் முரண்பாடுகள் இரு வகையானது. ஒன்று சிநேக முரண்பாடு, மற்றையது பகை முரண்பாடு. எந்தவளியிலும் ஒத்துப் போக முடியாத இரு அங்கங்களுக்கு இடையே உள்ள முரண்பாடு பகை முரண்பாடுகள் எனப்படும். முன்பு கூறப்பட்ட உதாரணங்கள் அனைத்தும் பகை முரண்பாட்டிற்குரியனவேயாகும். தொழிலாளி - விவசாயி, ஆசிரியர் - மாணவன், புத்திஜீவிகள் - மக்கள் ஆகியோரிடையே நிலவும் முரண்பாடுகள் சிநேக முரண்பாடுகளாகும்.

சிநேக முரண்பாடுகளைக் கையாள்வதற்கான அரசியல் பலாத்காரமற்ற வழிவகையைச் சேர்ந்ததாகும். பகை முரண்பாடுகளை கையாள்வதற்கான அரசியல் பலாத்கார வழிவகை அரசியலாகும்.

பலாத்கார வழிவக்கை என்பது பலரகமானது. மக்கள் கிளர்ச்சிகள், சட்டமறுப்புகள், வேலை நிறுத்தங்கள், மறியல் போராட்டங்கள், ஆயுதம் தாங்கிய மக்களின் எழுச்சி நடவடிக்கைகள், போர் ஆகியவை பலாத்கார வழிவகைகளுக்கு சில உதாரணமாகும்.

சுருக்கமாகச் சொன்னால் பலாத்கார போராட்டங்கள் இராணுவரீதியான மோதல்களற்ற போராட்டங்கள், இராணுவ ரீதியான மோதல்களுடனான போராட்டங்கள் என இருவகையாக பிரிந்துள்ளது.

1931ல் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸின் தலைமையில் சட்டசபைத் தேர்தலை பகிஸ்கரித்தது இராணுவ ரீதியான மோதல்களற்ற பலாத்காரமாகும். 1960ல் நடந்த சத்தியாக்கிரம். தொடர்ந்து நடந்த சட்டமறுப்பியக்கம், 1972ல் நடந்த கறுப்புக்கொடி இயக்கம். 1966-1969 வகையான தீண்டாமை ஒழிப்பு போராட்டம். 1977ல் தமிழீழக் கோரிக்கையை எடுத்தியம்ப நடைபெற்ற வாக்கு சேர்ப்பு இயக்கம் போன்றவை இராணுவரீதியான மோதல்களற்ற பலாத்காரங்களாகும். அவை போரல்ல. 80ம் ஆண்டுகளில் இராணுவரீதியான மோதல்களை பிரதானமாகக் கொண்ட பலாத்காரம் செயல்வடிவம் பெறுகிறது. அதாவது போர் என்ற கட்டத்தை அடைகின்றது. இன்றும் அக்கட்டம் தொடர்கின்றது.

தமிழீழ வரலாற்றை நோக்கும் போது, சிங்கள பேரினவாத அரசுடனான பகைமை முரண்பாட்டைத் தீர்ப்பதிலான பலாத்கார வழிவகைகளின் ஒரு உயர்ந்த கட்ட வடிவமே போராகும். இது ஒரு இயல்பான வளர்ச்சி என்பதை இங்கு காணக்கூடியதாய் உள்ளது.

ஆனால் இதில் இருந்து நாம் எங்கும் எப்போதும் பகை முரண்பாடுகளை தீர்ப்பதற்கான வழிவகைகளின் ஒரு உயர்ந்த கட்ட வளர்ச்சி போராகத்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வரமுடியாது. அதாவது இது ஒரு பொதுவிதியல்ல.

கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் தமது பகைமை முரண்பாடுகளை தீர்த்துக்கொண்டு பேர்லின் சுவரை உடைத்தெறிய ஒரு போர் அவசியப்படவில்லை. ஈரானில் ஷா மன்னனின் அமெரிக்கசார்பு இராணுவ கொடுங்கோலாட்சியை தூக்கி எறிய போர் அவசியப்படவில்லை. மக்கள் கிளர்ச்சியே அங்கு அதி உயர் பலாத்கார வடிவமாக இருந்தது. போல்டிக் குடியரசுகள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்று தனிநாடாவதற்கு ஒரு போர் அவசியப்படவில்லை. தமிழ் நாட்டில் பிராமணியம் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவதற்கு ஒரு போர் அவசியப்படவில்லை. இந்த உதாரணங்கள் எல்லாம் விதிவிலக்குளல்ல. மாறாக, பலாத்கார அரசியலின் தவிர்க்கவொண்ணா தொடர்ச்சியே போர் என்பது உண்மை.ஆனால் பலாத்கார அரசியல் கட்டாயமாக போராகத்தான் தொடரும் என்பது உண்மையல்ல என்பதையே இவ் உதாரணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அது யுத்தமாகத்தான் தொடருமா இல்லையா என்பது அவ்வவ் நாட்டின் ஸ்தூலமான நிலமையைப் பொறுத்த விடயமாகும்.

இலங்கைத் தீவினதும், தெற்காசியப் பிராந்தியத்தினதும் ஸ்தூலமான நிலமைகள் தமிழீழ மக்களின் பலாத்கார போராட்டத்தை ஆயுதப் போராட்டம் (போர்) என்ற கட்டத்திற்கு உயர்த்தி விட்டது.

இதனால் 1980 களின் முற்கூறுகளில் இருந்து போர் தான் தமிழீழத்தின் அரசியலாக மாறிவிட்டது. தமிழீழப் போரில் இருந்து விலகியிருக்கும் ஒருவன் தமிழீழ அரசியலில் இருந்தே முற்றாக விலக வேண்டியதான நிலையே இன்று வழமையாய் உள்ளதற்கான காரணம் இதுவேயாகும். மறுபுறத்தில் தமிழீழ அரசியலுடன் தொடர்புபடும் ஒருவன் ஏதோ ஒரு வழியில் தமிழீழப் போருடனும் தொடர்பு படவேண்டியதன் அவசியம் ஏற்படுவதற்கான சமூக காரணமும் இதுவேயாகும்.

● மாதுங்கன் ●

## மரணம் மட்டுமல்ல விடுதலையும் கூடத்தான்........

நான் உன்னோடு கதைக்கத் துடிக்கிறேன்
நீயோ என்னைக் காப்பாற்றத் துடிக்கிறாய்
போராளிக்கு -
கிடைக்கின்ற விடுதலை மட்டுமல்ல.......
வருகின்ற சாவும் உறுதிதானே.

நண்பனே, எனக்கு நீ -
விளையாட்டுத் திடலில் கைமுறிந்தபோது
வீட்டுப்பாடம் எழுத உதவிய நாளில்......
கவண்கொண்டு காகம் அடித்த காலத்தில்......
ஊரை அண்டிய ஆற்றில்
அக்கரை தொடும் போட்டியில்......
திருட்டுத்தனமாகப் படம் பார்க்கையில்.....
அரட்டைச் சந்தியில் கலந்து கதைக்கையில்......
நண்பனாகவில்லை.

நம் நட்பு நடப்பட்டதும் வேர்விட்டுக் கிளைபரப்பியதும்
எப்பொழுது என்று தெரியவில்லை.
நம் தேச அடிமையை உணர்ந்து திசை திரும்பியபோது......
இனவெறியன் -
நம் இனத்தின் தலையில் வைத்த கொள்ளியும்
நம் நம்பிக்கைகள்; எதிர்காலம் நாசமானதும்
விடுதலைக் கைகளின் வீரக்கதைகளும்
சகோதார்களைப் பிடித்து அரசு செய்த வதைகளும்
நம் நட்புக்கு விதை போட்டிருக்கலாம்.

ஆனால்....
நம் புலிப்படைப் பயிற்சியின்போது
தொட்ட துவக்குகளும், கற்ற பாடங்களும்,
விழுந்து எழுந்து ஓடிய மதில்கள்,
தரைகள், ஏணிகள், படுத்து எழும்பிய பாய்கள்.......
மலை உச்சியில் ஓலைக் கொட்டிலில்
உறையவைத்த ஊதல்காற்று.
போர்வைக்கு மேலாக கூரையால் விழுந்த
மழைநீர்ச் சொட்டு, நம் பசியை விரட்டிய -
பயறு நிறைந்த ஒற்றை ஈயத்தட்டு
விடியலில் எழ அடிக்கும் ஊதுகுழல் இவையெல்லாம்
உறுதியாக நம்மை இணைத்திருக்கும் களத்தில்.
நாம் கண்ட வெற்றிகள், சாதனைகள், இழப்புகள், கனவுகள்,
நம் நட்பில் வேர்விட்டிருக்கும்.
இந் நட்புவேர் கிளைபரப்ப........
எதிரி நம்மைச் சிந்தவைத்த குருதித் துளிகளால்
எத்தனைமுறை நீர்விட்டான்.

நண்பனே !
நீயோ என்னைக் காப்பாற்றத் துடிக்கிறாய்
நானோ உன்னோடு கதைக்கத் துடிக்கிறேன்.

போராளி -
விதை போடாமல் விழுவதில்லை வாழையைப் போல.
இது உனக்குப் புரிந்தது தானே!

விடியலில் வீசும் உப்புக் காற்றுத் தடவ,
கடலலை தழுவிக் கிடந்த அப் போராளித் தோழனின் உடுப்பில்
கொழுவிக் கிடந்த ஆயுதமும்,
குண்டு வெடிப்புகளுக் கிடையில் தவழ்ந்து
உடலையும் உயிரையும் இம் மண்ணுக்குக் கொடுக்குமுன்
தன்துவக்கினை நம்மிடம் கொடுக்க
துடித்த துடிப்பும், கொடுத்தபின்.........
அவன் அடைந்த உவகையும்.

இத்தேசத்தின் காவல் கருவிகளை
எடுத்துச் செல்ல கடைசி முறையாக
நம்மை அழைத்த அக்குரலும் எம்மிடம் சொல்லியது
அவர்களின் வீரச் சாவைமட்டுமா?

இல்லை -
போராளிக் கைகள் மீது கொண்ட நம்பிக்கையையும்,
மீண்டும் மீண்டும் உயிர்த்தெழும்
நம் இலட்சியத்தையுமல்லவா ?

## 9 ஈரோஸ் எம்.பி பதவி இழப்பு

9 ஈரோஸ் எம்.பிகளும் பதவி இழந்தனர்

யாழ் மாவட்டத்துக்கான ஒன்பது ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை இழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுயேச்சை உறுப்பினர்களாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர்களின் ஆசனங்கள் தற்போது வெற்றிடமாகவுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சர்வதேச பெண்கள் தினம் சிந்தனைக்கு சில வரிகள்

08.03.92 அனைத்துலக மகளிர் தினம் முழுஉலகமுமே அன்றைய தினத்தை பெண்ணினத்தின் எழுச்சித் தினமாக கொண்டாடு கிறது. யுகம் யுகமாக ஆணாதிக்க அடக்கு முறையின் கீழ் ஒடுக்கப் பட்டு வந்த பெண்குலம் சமஉரி மைக்காக, சமத்துவத்திற்காக, சமூகநீதிக்காக குரல் எழுப்பும் புரட்சிகரதினம். பெண் விடுத லையின் வரலாற்றுத் தேவை யையும் அவசியத்தையும் இன் றைய தினம் குறித்து நிற்கிறது.

எமது சுதந்திர இயக்கத்தின் ஆரம்ப காலந்தொட்டே பெண் விடுதலையை ஒரு பிரதான இலட்சியமாக நாம் வரிந்து கொண்டோம். பெண்கள் விழிப் புற்று, எழுச்சி கொண்டு தமது சொந்த விடுதலைக்காகவும் தேசத்தின் விடுதலைக்காகவும் போராட முன் வரும்போது தான் அந்தப் போராட்டம் ஒரு தேசிய போராட்டமாக முழு வடிவத்தைப் பெறும் என்ற உண்மையை நாம் அன்று தொட்டே உணர்ந்திருந் தோம்.

வீரத்திலும், தியாகத்திலும் விடு தலையுணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை எமது பெண் போராளிகள் தமது வீர சாத னைகள் மூலம் நிருபித்துக் காட் டியுள்ளனர். ஒரு புதுமைப் பெண் ணை, ஒரு புரட்சிகரப்பெண்ணை எமது விடுதலை இயக்கம் படைத்திருக்கிறது. தமிழீழத்தில் இந்தப் பெண் புரட்சி தொடர வேண்டும். மேலும் மேலும் புரட் சிப் பெண்கள் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணி திரள வேண்டும். போராட்டம் மூலமாகவே நாம் தேசவிடுத லையையும் பெண் விடுதலை யையும் வென்றெடுக்க முடியும்.



● வே.பிரபாகரன் ●

சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது போராட்ட இலட்சியம். பெண்கள் சமஉரிமை பெற்று, சகல அடக் குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று, ஆண்களுடன் சமத்துவ மாக கெளரவமாக வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாக, தமிழீழம் அமைய வேண்டும் என் பதே எனது ஆவல். பெண்களின் எழுச்சித் தினமாகிய இன்று உலகப் பெண்ணினத்தின் உரி மைப் போராட்டங்களுங்களுக்கு எனது ஆதரவையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# அரசின் இயலாமையை மறைக்க சிவில் நிர்வாக நாடகம்

## யாழ்.தினசரி உதயன் கருத்து

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இரா ணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மிகப்பரந்த அளவில் சிவில் நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு ஜனாதிபதி உத்த ரவிட்டிருக்கிறார்.
சிவில் நிர்வாக வேலைகளைச் சீர்செய்து கண்காணிக்கும் பொருட்டு, அவற்றை உரிய முறையில் செயற்படுத்தவென மேலதிக அரசாங்க அதிபர் தரத் திலுள்ள ஒருவர் நியமிக்கப்பட் டுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாடு விடுத லைப்புலிகளின் கட்டுப்பாட்டில், அவர்களின் நிர்வாகக் கண்கா ணிப்பின்கீழ் உள்ளது என்ற நிலையை மறைப்பதற்கான ஒரு முயற்சி இது. யாழ்ப்பாணக்குடா நாட்டில் மட்டுமல்ல வடக்கின் ஏனைய பிதேசங்களிலும் நிர்வா கம் புலிகளின் கட்டுப்பாட்டி லேயே நடக்கின்றது.

இது வடக்கில் அரசாங்கத்தின் அதிகாரம் செல்லுபடியாகாமல் போயிற்று என்பதற்கு அத்தாட்சி. அதாவது வடக்கில் போர் தொடர்ந்தாலும் நிர்வாக அதிகா ரத்தைத் தன்னிடம் வைத்திருக்க முடியாமல் அரசு தோல்வி கண் டுவிட்டது என்பதை எடுத்துக் காட்டுவது.
வடக்கில் அரசாங்க ஆணை நடக்கவில்லை. அங்கு அரசு தோல்வி கண்டுவிட்டது என் பதை தென்னிலங்கை அரசியல் விமர்சகர்கள் அடிக்கடி ஆணித் தரமாக உறைக்கும் வண்ணம் சுட்டிக் காட்டி வருகிறார்கள். இது விடயம் சர்வதேச மட்டத் திலும் அரசாங்கத்தின் பலவீ னத்தை உறுதி செய்வதாக உள் ளது.

அந்தப் பலவீனத்தை மூடிம றைத்து யாழ்ப்பாணத்திலும் அர சின் அதிகாரம், ஆணை செயலில் உள்ளது என்று காட்டுவதற்கான முயற்சியே இந்தச் சிவில் நிர் வாக ஏற்பாடுகள் எல்லாம் அர சியல் வட்டகையில் ஆடப்படும் போலி நாடகங்கள் போன்ற ஒரு சிவில் நாடகமாகவே இது அமையும். மிகப் பிரதான நோக் கமும் அதுவே.

யாப்பாணக் குடாநாட்டிலும் சரி, ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் சரி, இராணுவ நடவடிக்கைகளின் போது இடம் பெயர முடியாமல் சிக்குண்டு போன மிகக்குறைந்த எண்ணிக்கையான மக்களே இரா ணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளின் வாழ்கிறார்கள். அவர் களின் அடிப்படைத் தேவைக ளான உணவு மற்றும் மருத்துவச் சேவைகள் கூட ஸ்தம்பித்துப் போயுள்ளன. சிக்குண்டவர்களில் பெரும்பாலானோர் வயதானோர் கள்.
தீவுப்பகுதிகளுக்கு நியமிக்கப்பட் டுள்ள சிவில் நிர்வாக அதிகாரி இராணுவத்தின் உத்தரவை மீறி எதுவும் செய்துவிட முடியாது. வெறும் இணைப்பு அதிகாரியா கவே அனுப்பப்பட்டிருக்கிறார். எனவே அவர் அங்குள்ள மக்க ளின் தேவைகளை நிறைவேற் றுவதற்குப் பெரிதாக எதுவும் செய் துவிட முடியாது. அதாவது தீபகத் தில் சிக்குண்ட மக்களின் கஸ்ரங் கள் நீங்கிவிடும் என்று எதிர்பார்ப் பதற்கு இல்லை. இப்போதைய அவலங்களும், விரக்தி மிக்க வாழ்க்கையும் தொடரவே செய் யும். இராணுவ அதிகாரமே மேலோங்கி நிற்கும்.

# ஆசிய ஆபிரிக்காவில் கதிர்வீச்சுத் தொழிற்சாலை?

அணுக்கதிர் வீச்சு தொழிற்சா லைகளை மூன்றாம் உலகில் அமைக்க உலக வங்கி ஆலோ சனை.

அணுக்கதிர் வீச்சுப் பாதிப்பை உண்டாக்கக்கூடிய தொழிற்சா லைகளை மூன்றாம் உலக நாடு களில் நிறுவும்படி ஆலோசனை கூறும் திட்டமொன்று தன்வசம் உள்ளதாக லண்டனில் வெளி யாகும் 'எக்கனோமிஸ்ற்' என்ற சஞ்சிகை செய்தி வெளியிட்டுள் ளது.
உலக வங்கியின் பிரதம பொரு ளியலாளர் லோறன்ஸ் சமேர்ஸ், தனது திட்டத்தின் சில பகுதிகள் உலக வங்கியில் சலசலப்பை ஏற் படுத்தியாதாகக் குறிப்பிட்டு முகவர் ஒருவருக்கு எழுதிய கடி தத்தைப் பிரசுரிக்கப் போவதா கவும் 'எக்கனோமிஸ்ற்' அச்சுறுத் தியுள்ளது.
மெக்சிக்கோ நகரம் மற்றும் லொஸ் ஏஞ்சல்சை விட ஆபிரிக் காவின் வளிமண்டலம் குறை வாக மாசு பட்டிருப்பதாகவும் லோறன்ஸ் சமேர்ஸ் கடிதமெழு தியுள்ளதாகவும் அப் பத்திரிகை தெரிவிக்கின்றது. அபிவிருத்திய டையாத நாடுகளுக்கு ஏன் இந் தத் தொழிற்சாலைகளை நிறுவக் கூடாது என்றும் அக்கூட்டத்தில் கேட்கப்பட்டுள்ளது.

# குடியேற்றமும் கைதும்

- திருமலை பாலம் போட்டா றுப் பகுதியில் உள்ள தமிழர்க ளின் காணிகளை இராணுவத் தினர் பறித்து சிங்கள மீனவர்க ளைக் குடியேற்றி வருகின்றனர்.
- அம்பாறையில் இராணுவம் மேற்கொண்ட சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் 35 தமிழ் மக்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். அவர்கள் அனைவரும் இதுவரை விடுதலை செய்யப்ப டாமல் தடுப்புக்காவலிலேயே வைக்கப்பட்டுள்ளனர்.

## உலகத்தமிழர் சபை

தமிழ்நாடு, தமிழீழம், சிங்கப்பூர்,மலேசியா உட்பட உலகெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து தமிழர்களையும் ஒன்றிணைத்து உலகத்தமிழர் சபையை அமைப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

" தமிழர்" அனைவரையும் இணைக்கும் இம் முயற்சிக்கு சமீபத்தில் ஐரோப்பா, கனடா உட்பட பல நாடுகளுக்கு விஜயம் செய்த திரு.பழ. நெடுமாறன் ஏற்புடைய பங்களிப்பை வழங்கியுள்ளார். சமீபத்தில் தமிழகம் திரும்பிய இவர் உலகத் தமிழர் சபை ஒன்றை உருவாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை தமிழ்நாட்டு தலைவர்கள் பலருக்கு எடுத்துரைத்த தைத் தொடர்ந்து அனைத்துத் தமிழரையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சியாக உலகத்தமிழர் சபையை அமைக்கத் தமிழ்நாட்டிலும், உலகின் பலநாடுகளில் வாழும் தமிழரிடையிலும் ஆர்வம் ஏற்பட்டள்ளது எனத் தெரியவருகிறது.

# சுண்ணாகம்-இயக்கச்சி வரை விரைவில் மின்சாரம்

யாழ். மாவட்டத்து க்கு மின் விநி யோகம் வழங்கவதற்கு முதற்படி யாக சுன்னாகத்தில் இருந்து இயக்கச்சி வரையான மின் இணைப்புகளைத் திருத்தும் வேலை கள் பங்குனி முதலாவது வாரத் தில் ஆரம்பிக்கப்படும்.
இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமை யாளர் திரு. எஸ்.கந்தசாமி இத் தகவலை வெளியிட்டார்.
மாங்குளம் பகுதியில் மின் இணைப்புத் திருத்த வேலைகள் பூர்த் தியாகியுள்ளன. மாங்குளம் தொடக்கம் வவுனியா வரையுள்ள மின்சார இணைப்புகளைச் சீர் செய்யும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்த வேலைகள் இம்மாத இறுதியுடன் பூர்த்தியாகும் என எதிர்பாக்கப் படுகிறது. அதன் பின்னர், சுன் னாகத்தில் இருந்து இயக்கச்சி வரை மின்சாரம் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படவுள்ளது.

# நாடு திரும்பிய அகதிகள் மாத்தளையில் அலைச்சல்

தமிழ் நாட்டிலிருந்து அண்மை யில் இலங்கை திரும்பிய சிலர் மாத்தளைப் பகுதியில் வீடு தேடி வந்திருப்பதாகத் தெரிய வருகின் றது.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் கன்னியா, கிண்ணியா, அன்புவ ழிபுரம் பகுதிகளைச் சேர்ந்த சுமார் ஐம்பது குடும்பங்கள் மாத் தளைப் பகுதியில் வீடு தேடி அலைவதாக தெரியவந்துள்ளது.
இக் குடும்பத்தவர்களில் பெரும் பாலானோர் பெண்களும், வயோ திபர்களும் ஆவர்.
இக் குடும்பங்கள் தங்குவதற்கு இடமின்றி கோவில்களிலும், பொது இடங்களிலும் பொழுதைக் கழித்து வரும் இவர்கள், கோவில் களில் நடைபெறும் அன்ன தானங் களிலேயே மதிய உணவுக்கு நம் பியிருப்பதாகவும் தெரிய வருகின் றது.



ஜேர்மனியில் (Lamperthem) லம்பேர்தெம் நகரில் கடந்த 31-01-92 அதிகாலை வெளிநாட்டவர் தங்கியிருந்த கட்டடம் ஒன்று வெளிநாட்டவர் எதிர்ப்பு நாசிகளால் தீ வைத்து கொழுத்தப் பட்டது. முற்றக எரிந்து சாம்பரான இக்கட்டடத் தில் இலங்கையைச் சேர்ந்த முகைதீன் அவர் மனைவி நிலோபா, அவரது குழந்தை முகாத் ஆகிய மூவரும் அடங் குவர்.

அண்மைக்காலங்களில் ஐரோப்பாவின் பல பாகங்களில் "வெளிநாட்டவர் எதிர்ப்பு நாசிகளால்" இது போன்ற சம்பவங் கள் நிகழ்த்தப்பட்டு வருவது சகஜமாகிக் கொண்டு வருகிற து.குறிப்பாக ஜேர்மனியில் இது போன்ற பல சம்பவங்கள் நடந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப்புலிகள்
பிரித்தானியக் கிளை
54,TAVISTOCK PLACE
LONDON WC1H 9RG
TEL:071 837 7162
FAX:071-278 5666

T.C.C
P.O.BOX 1699 Vika
0110 OSLO - 1
NORWAY
TEL:02 191260
FAX:02 190114

T.C.C
341 Rue Des Pyrenees
75020 PARIS
FRANCE
TEL:435 81142
FAX:435 81191

தமிழீழ விடுதலைப்புலிகள்
ஜேர்மன் கிளை
P.O.BOX 1132
5172 LINNICH
GERMANY

TAMIL CO-ORDINATING COMMITTEE
VIA MARIANO STABILE - 34
90139 PALERMO
ITALY
TEL/FAX: 091-6113179

Printed by SLOUGH OBSERVER Slough, England. Tel: 0753 523355

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்